கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-௧௩.] ஆனந்த௵ மாசி௴ [பகுதி-௪.

Vol. XIII. February—March, 1915. No. 4.

இலங்கைமஹாவம்சமும், தென்னிந்திய சரித்திராராய்ச்சியும்.

"செந்தமிழ்" (தொகுதி ௧௩ பகுதி ௩-ல்) ௧௱ம்பக்கத்தொடர்ச்சி.

இலங்கையிதிஹாஸங்களின் சரித்திரநோக்கமானமதிப்பை ஆராய்ந்தபின்னர் இவ்விதிஹாஸங்கள் தென்னிந்தியசரித்திரத்தோடும் கர்ணபரம்பரையோடும் எவ்வாறுசம்பந்திக்குமென் றாராய்வ தவசியம். இவ்வகையான ஆராய்ச்சிக்குச்சாதனமானவிஷயங்கள் இலங்கைக்கு மஹாவம்சம் முதலிய இதிஹாசங்களிற்பாவிக்கிடக்கத் தென்னிந்தியாவுக்குத் தமிழ்க்காப்பியங்களினின்றே தேடியெடுத்த லவசியமாயிருக்கிறது. கி.பி. மூன்றுநூற்றுண்டில்வாழ்ந்த மஹாஸேனமஹாராஜாவுக்கு முற்பட்டகல்வெட்டுக்கள் கிடைப்பதரிது. காப்பியவழியானசாதனங்கள் கல்வெட்டுக்களைப்போல் அவ்வளவு திட்டமானவையாயும், அம்மாதிரியான சரித்திரமதிப்புப்பெறுவனவாயுமிராவாயினும், வேறுசான்றுகளில்லாவிடத்து எடுத்தாளப்பெறின் அவைகளே தக்கசான்றாகநிற்கும். மொத்தத்தில் இம்மாதிரியானபிரமாணங்களின்மதிப்பு இவ்வளவேயென்றுதெளிதல் அஸாத்தியமாயினும், ஊக்கத்தோடு ஆராய்ச்சிசெய்வோர்க்கு அவர்க ளவ்வச்சமயத்திலெடுத்தாளும் ஒவ்வொருசெய்தியும் எவ்வளவுமதிப்புப்பெறுமென்பதைக் கண்டறிதல்கூடும்.

இம் மஹாவம்சத்தில் யாம் எடுத்தாளப்புகுங்குறிப்புக்களில்முற்பட்டது இலங்கைத்தீவின் ஒருபாகத்துக்கு 'நாகதீபம்' என்னும்பெயர் உண்டென்பது. இத்தீவின்குடிகளெல்லோரும் ஒருகாலத்தில் நாகரென்றுபெயர்வாய்ந்திருந்தனர். மாமனும் மருமகனுமாகிய மஹோதர சூளோதரரென்போர் ஒரு மணியாஸனத்துக்காகப் போர்புரிந்து,

*

புத்தருடைய இடைப்பாட்டாற் போரொழிந்து அவ்வாஸனத்தையு மவர்க்கேயளித்தனரென்னுஞ்செய்தி மஹாவம்ச முதலத்தியாயத்திற் காணலாம். இச்செய்திதான் மணிமேகலையிற் கீழ்வருமாறுகூறப்பட்டிருக்கிறது. அதாவது,

"அறவோற்கமைந்தவாசனமென்றே
நறுமலரல்லதுபிறமரஞ்சொரியாது
பறவையுமுதிர்சிறைபாங்குசென்றதிராது
தேவர்கோனிட்டமாமணிப்பீடிகை
பிறப்புவிளங்கவிரொளியறத்தகையாசனம்
கீழ்நிலமருங்கில்நாகநாடாளு
மிருவர்மன்னவரொருவழித்தோன்றி
யெமதீதென்றேயெடுக்கலாற்றார்
தமபெரும்பற்றுநீங்கலுநீங்கார்
செங்கண்சிவந்துநெஞ்சுபுகையுயிர்த்துத்
தம்பெருஞ்சேனையொடுவெஞ்சினம்புரிநா
ளிருஞ்செருவொழிமினெமதீதென்றே
பெருந்தவமுனிவனிருந்தறமுரைக்கும்
பொருவருசிறப்பிற்புரையோரேத்துந்
தருமபீடிகைதோன்றியதாங்கென"

என்பதாம்.

இரண்டாவது:-இலங்கைத்தீவில் சமந்தகூடம் அல்லது சமனொலை யென்னும் மலையினுச்சியிற் புத்தருடைய அடிச்சுவடுபதிந்திருக்குஞ் செய்தி. புத்தர்ஒருகாலத்து இலங்கையின்தென்மேற்குப்பாகத்திலுள்ள கலியாணநகரத்தரசனான மணியக்கிகனளித்த விருந்துணவையுண்டு, அதற்குமாறாகத் தன் னடிச்சுவட்டைச் சமந்தகூடத்தில் நிலைபெறச் செய்துபோயினரென்று மஹாவம்சஞ்சொல்லும். இவ்வடிச்சுவட்டையும் அத னற்புதசக்தியையும் மணிமேகலை,

"ஈங்கிதனயலகத்திரத்தினதீவத்
தோங்குயர்சமந்தத்துச்சிமீமிசை
யறவியங்கிழவோனடியிணையாகிய
பிறவியென்னும்பெருங்கடல்வீடூ
மறவிநாவாயாங்குளதாதலின்"

என்று சொல்லும்.

மூன்றாஞ்செய்தி:-விஜயனு மவனுடன்வந்தவர்களும் பெண்வேட்டுப் பாண்டியனுக்கு வேவுசெலுத்த, அவ்வேண்டுகோட்கிணங்கிய பாண்டியவரசன் தன்மகளையும் இன்னுஞ்சிலபெண்களையும் பதினெட்டுத்தொழிலாளர்களான குடிக ளாயிரவரையும் அனுப்பியதாக மஹா வம்சம் சொல்லும். இச்செய்திக்கு எனக்கெட்டியமட்டும் இத்தேசத்தியபிரமாணம் ஒன்றுங்கிடைக்கவில்லை. இவர்களெல்லாம் மன்னார் தீவுக்கெதிரி லிறங்கிப்போந்தனராம். இலங்கையிலும் இரண்டுசாலைகள் குறுக்கிடுமிடத்துக்குச் சதுக்கமென்னும்பெயர் வழங்கிவந்ததென்பது நாகசதுக்கமென்பதால்விளங்கும். காவிரிப்பூம்பட்டினத்திற்பூத சதுக்கமென்று ஒரு இட மிருந்ததென்பது மணிமேகலை சிலப்பதிகாரங்களிற் காணலாம்.

பசியால்வருந்துபவர்களுக்கு அன்னமளிக்கும் அற்புதசக்தியுடைய பிச்சைப்பாத்திரமொன்று மணிமேகலையில்வர்ணிக்கப்பட்டிருப்பது எல்லோருக்கும் தெரிந்திருத்தல்கூடும். அது, முதன்முதற் சிந்தாதேவியினிடத்திருந்து வற்கடகாலத்திற் பசியாற்றுன்புறும்ஜனங்களின் உஜ்ஜீவனத்துக்காக ஒருபார்ப்பனன்பெற்றது. வற்கடம்நீங்கிப் பசிப்பிணியொழியவே இப்பாத்திரம் மணிபல்லவத்தினிடையே ஒரு சிறுகுளத் திடப்பட்டது. இச்செய்தி,

> "மாமலர்க்குவளையுநெய்தலுமயங்கிய
> கோமுகியென்னுங்கொழுநீரிலஞ்சி
> யிருதிளவேனிலிலெரிகதிரிடபத்
> தொருபதின்மேலுமொருமூன்றுசென்றபின்
> மீனத்திடைநிலைமீனத்தகவயிற்
> போதித்தலைவனொடுபொருந்தித்தோன்று
> மாபுத்திரன்கையமுதசுரபியெனு
> மாபெரும்பாத்திர..................
> அந்நாளிந்நாளப்பொழுதிப்பொழுது
> நின்னுங்குவருவதுபோலும்நேரிழை"

என்பதனால் அறியப்படும்.

மஹாவம்சத்தில் புத்தரேயாண்ட பிச்சைப்பாத்திரத்தைப் பௌத்த ஞாபகசின்னங்கள்நிரம்பினதாய் மாஹிந்தர் ஏவலால் சுமனர் அசோக மஹாராஜரிடத்திருந்து தந்தாரென்றும், அஞ்ஞாபகக்குறிகளெல்லாம்

அவைகளுக்கேற்பட்ட இடங்களிலடக்கம்பெற்றவுடனே அப்பாத்திரம் தேவாநம்பியதிஸ்ஸரென்னு மரசனால் அரமனையில்வைத்துப் பூசிக்கப் பெற்றுவந்ததென்றுங் காணப்படுகிறது. இவ் விருபாத்திரங்களையும் சம்பந்தப்படுத்தும் ஒருசான்று மிதுவரைக்குங் கிடைத்திலது.

இதுகாறும் எடுத்துக்காட்டிய உதாரணங்களெல்லாம் கதைத் தன்மையனவாய் ஒன்றினின்றும் மற்றொன்றுபிறந்திருக்குமோ? அல்லது இருவகைக்கதைகட்கும் மூலம் ஒன்றேயாயிருக்குமோ? என்று அநுமானிக்க இடமுள்ளவைகளாயிருப்பதோடு சரித்திரவாராய்ச்சியில் வேறுவிதமானமதிப்புக் கிடங்கொடாமலு மிருக்கின்றன. பின்வரும் மேற்கோள்களோவென்றால் அத்தன்மையனவல்ல. இவைகள் விவரங்கள்வேறுபட்டிருப்பனவாயினும் பொதுநோக்கத்தில் ஒற்றுமையுடையனவாய் நிகழ்ந்தசெய்திகளேபோற் சரித்திரநோக்கத்தில் மதிப்புப்பெறுவனவாய்த்தோன்றும்.

கைகரவர்கள்காலவரையறைப்படி கி. மு. 187-ல் இப்பாகுபாடு ஏற்படும். இவ்வருஷத்தில் திஸ்ஸன் என்பவன்தம்பியர்களில் ஒருவனாகிய ஸூரதிஸ்ஸன் இலங்கையாட்சி பெற்றான். இவனுக்குப் பட்டம் பெறுமுன் ஸுவர்ணபிண்டதிஸ்ஸனென்று மறுபெயர்வழங்கியதாக மகாவம்சஞ்சொல்லும். தன்னுடைய சுகிர்தத்தாற் பசுவயிற்றினின்றும் பொன்முட்டையிற்பிறந்தானென்று மணிமேகலையிற்சொல்லப்பட்டுள்ள ஆபுத்திரன்செய்திக்கும் இப்பெயர்க்கும் ஸம்பந்தங்கற்பிப்பது அதிகாரமற்றகூற்றாகும். இவனாட்சியிற்றான் முதன்முதல் தமிழர்கள் ராஜ்யாபகாரஞ்செய்து இலங்கையாட்சிபெற்றதாக மஹாவம்சத்தில் எழுதப்பெற்றுள்ளது. ஒரு குதிரைவியாபாரியின்மக்களிருவர் அரசனை வலிந்துவென்று இருபத்திரண்டுவருஷம் நீதியோடு அரசாண்டாரென்று காணக்கிடக்கிறது. பழையராஜவம்சம் மறுபடியும் தம் முரிமைபெற்றுப் பத்துவருஷஞ்சென்றபின் இளாரன் (ஏலேலசிங்கன்) என்னும் தமிழன் அரசையபகரித்து ஆட்சிபூண்டான்.

இவ்விளாரன் உயர்ந்தகுடியிற்பிறந்தவனென்றும், சோழதேசத்தினின்றும்வந்து நாட்டைச் சுசீலனென்னுமரசனிடம் கவர்ந்தவனென்றும், நாற்பத்துநான்குவருஷம் உற்றார், மாற்றாரிடம் வேறுபாடின்றிச் செங்கோன்முறைதிறம்பாமற்செலுத்தியவனென்றும் சிறப்பிக்கப்பெற்றுள்ளான். இவ்வரசன் தன் படுக்கைத்தலைமாட்டில் ஒருமணியைக்

கட்டிவைத்து அதை நியாயம்வேண்டுவோர் இடையூறுசிறிதுமின்றி யசைத்து நியாயம்பெற்றுப்போகச் சௌகரியஞ்செய்திருந்தானென்றும், இலங்கைச்சரித்திரங்கூறும். பெரியபுராணத்திற்கூறப்பட்ட மனுநீதிகண்டசோழனைப்போல இவனும் ஒருபசுவின்கன்றின்மேற்றேரோட்டிய தன்மகன்பேரில் தேரோட்டினனென்றுதெரிகிறது. இவ்வொற்றுமையையும் சிலப்பதிகாரத்தில் இக்குறிப்படங்கிய,

"அறனறிசெங்கோன்மறநெறிநெடுவாட்
புறவுநிறைபுக்கோன்கறவைமுறைசெய்தோன்
பூம்புனற்பழனப்புகார்நகர்வேந்தன்"

என்னு மேற்கோளையுங்காட்டியுள்ளார் ஹூல்ஷ் ஆசிரியர்.

இஃதொன்றேயன்றிப் பாண்டியற்கு மித்தகைய ஆராய்ச்சிமணியிருந்தது,

"குடையொடுகோல்வீழநின்றுநடுங்கும்
கடைமணியின்குரல்காண்பென்காணெல்லாம்"

"மறைநாவோசையல்லதியாவதும்
மணிநாவோசைகேட்டதுமிலனே"

என்னுமேற்கோள்களாலும், சோழன் கறவைமுறைசெய்தது,

"எள்ளறுசிறப்பினிமையவர்வியப்பப்
புள்ளுறுபுன்கண்டீர்த்தோனன்றியும்
வாயிற்கடைமணிநடுநாநடுங்க
வாவின்கடைமணியுகுநீர்நெஞ்சுசுடத்தான்ற
னரும்பெறற்புதல்வனையாழியின்மடித்தோன்
பெரும்பெயர்ப்புகாரென்பதியே"

என்னு மேற்கோளாலும் நன்குவிளங்கும்.

மனுச்சோழன்கதைக்கும், இலங்கையிதிஹாஸத்ததான இளாரன் செய்திக்கும் ஒரேமூல மிருந்திருக்கலாம். ஆயினும், இரண்டுகதைகளிலும் மூலம்யாவதென்றுதெரியும்வழி சிறிதுங்கிடைக்கவில்லை. சிலப்பதிகாரமேற்கோள்களில் இவ்விஷயம் விசதமாகிறது. இச்செய்தி புறவுநிறைபுக்கோன் சோழன் ஒருவனுக்குச் சொல்லப்பட்டுள்ளது. இது சிபிசக்கிரவர்த்தியின்புராணகதையாயும், பௌத்தஜாதககதைகளில் ஒன்றாயு மிருக்கின்றது. பிற்காலத்திய சோழபரம்பரைப்பட்டிகளில், சிபி சோழவம்சத்தரசர்களிலொருவனாய்விளங்குகிறான்.

ஒரு குருவியின்முட்டையைவிழுங்கிய பாம்பைக்கிழித்துத் தாய்க்குருவிக்கு இளாரன் முறைசெய்தானென்னுஞ்செய்தியைநீக்கினும் பின்வருஞ்செய்தி கவனிக்கத்தக்கதாயிருக்கிறது. மஹாவம்சத்தின்படி இளாரன் பௌத்தனன்று. ஆயினும் தான் சவாரிசெய்யுங்கால் அறியாமற்சேதப்படுத்திய ஸ்தூபத்தின்சுவருக்காகத் தன் தலையைத் தேர்ச்சக்கரத்திலிடத்துணிந்தவன், அவ்வாலயத்தார் வேண்டுகோளால் தவிர்ந்து இடிந்தபாகத்தைக் கட்டிப்போந்தசெய்தி,

"உதவாவாழ்க்கைக்கீரந்தைமனைவி
புதவக்கதவம்புடைத்தனனொருநா
ளரசவேலியல்லதியாவதும்
புரைதீர்வேலியில்லெனமொழிந்து
மன்றத்திருத்திச்சென்றீரவ்வழி
யின்றவ்வேலிகாவாதோவெனச்
செவிச்சூட்டாணியிற்புகையழல்பொத்தி
நெஞ்சஞ்சுடுதலிலஞ்சிநடுக்குற்று
வச்சிரத்தடக்கையமரர்கோமா
னுச்சிப்பொன்முடியொளிவளையுடைத்தகை
குறைத்தசெங்கோற்குறையாக்கொற்றத்
திறைக்குடிப்பிறந்தோர்க்கிழுக்கமின்மை"

என்னும் மேற்கோளிலெடுத்தாண்ட பாண்டியன்முறைகண்டதன்மையையொக்கும்.

இவன் மூன்றாஞ்செய்தி, காயப்பரப்பியிருந்தநெல்லை அகாலப்பெயலானமழை நனைக்க, அதனாற் றுயருண்டகிழவிக்காகப் பட்டினிகிடந் திந்திரனைவருவித்துக் காலத்துப்பெயல்பெறுமாறு ஏற்பாடுசெய்தானென்பது. இச்செய்தி காப்பியசிறப்புத்துக்கிணங்கிய சிலவிவரங்களிற் றவிர விஷயத்தில் "முடிவளையுடைத்தோன்முதல்வன்சென்னியென், றிடியுடைப்பெருமழையெய்தாதேகப், பிழையாவிளையுட்பெருவளஞ் சுரப்ப, மழைபிணித்தாண்டமன்னவனாகிய" உக்கிரபாண்டியன்செய்தியையொக்கும்.

விவரங்களில் ஒற்றுமையில்லாவிடினும் நியாயத்தில் இதே மாதிரியான உயர்ந்த அபிப்பிராயம் கரிகாற்சோழனுக்குரியதாய்ச் சொல்லுப. இந்நியாயசம்பந்தமானமணி பொதுவானவிவரமாய்த் தோன்றுகிறது. முறைதவறியதால் அரசுகட்டிலிற்றுஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு மிவ்வுறுப்புண்டென்று முன்னமேகூறியுள்ளோம். இம்மணி கி. பி. பதின்மூற்றும்நூற்றாண்டினனாகிய குமாரகுலோத்துங்கனுக்கு முண்டென்பது,

"ஆடுங்கடைமணிநாவசையாமலகிலமெங்கும்
நீடுங்குடையைத்தரித்தபிரானிந்தநீணிலத்தே
பாடும்புலவர்புகழொட்டக்கூத்தன்பதாம்புயத்தைச்
சூடுங்குலோத்துங்கசோழனென்றேயெனைச்சொல்லுவரே"

என்னுஞ்செய்யுளால் விளங்கும்.

இச்செய்திகளின்விவரங்க ளெவ்வாறாயினும் இளாரன் என்பான் தமிழர்களில் உயர்குடியிற்பிறந்தவனென்பதும், சோழதேசத்தினின் றும்வந்தவனென்பதும் கவனிக்கத்தக்கவை. இவன் கரிகாலனேயாகக் கூடுமோ? அல்லது அவன் முன்னோர்களிலொருவனாயிருக்கலாமோ வென்னும் ஐயம் தோன்றுகின்றது. ஏனெனில் ராஜாவளி, ராஜரத்நா கரியென்னு மிலங்கையிதிஹாஸங்களில், சோழவரசன் ஒருவன் படை யெடுத்துவந்து, பன்னீராயிரம் இலங்கைக்குடிகளைச் சிறைகொண்டு போ யவர்களைக் காவிரிப்பூம்பட்டினங்கட்டுந்தொழிலிலேவினனென்று கூறப்பட்டிருக்கிறது. இ வ ன் கரிகாலன்முன்னோர்களிலொருவனா யிருந்திருத்தல்கூடுமாயினும் கரிகாலனேயென்றுசொல்லக்கிடைக்குஞ் சான்றுகள் மிகவும் குறைவாகவுள்ளன.

மஹாவம்சம் இந்தியாவைப்பற்றிப்பிரஸ்தாபிக்கும் சந்தர்ப்பம் இலங்கையரசனாகிய துட்டகாமணியென்பான் மஹாஸ்தூபத்தைக் கட்டிப் பிரதிஷ்டைசெய்ததைச்சொல்லுஞ்சமயமாம். அக்காலத்திற் பரதகண்டத்தில் எல்லாப்பாகங்களினின்றும் பௌத்தஸந்நியாசிகள் ஏராளமாய் வரவழைக்கப்பெற்றனர். ராஜகிருகம், ஈசிப்பட்டணம் (காசி) ஜேதவனம், கோஷிதாராமம் (கோசம்பி) தக்கணகிரி (உஜ்ஜெனி) அசோகாரமம் (புட்பபுரம்) காஸ்மீரம், பல்லவபோக்கம், அலஸந்தா (யோணநகரம்) விந்தியாரண்யப்பாதை, போதிமண்டம் (புத்தகயை) வனவாஸம், கேளஸவிஹாரம் இவ்விடங்களிலிருந்து பிக்ஷுக்கள் வந்து சேர்ந்தனர். இவைகளில் தென்னிந்தியாவிலுள்ளதென்று ஐயமின்றிச் சொல்லக்கூடியது ஒரே இடந்தான்; அதாவது தக்கணகன்னடமென்று இப்போது பெயர்வாய்ந்த வனவாஸமாம். பல்லவபொக்கமென்பது தென்னிந்தியாவிலுள்ளதென்றுகொள்ளல்கூடும். ஆனால் இது யவன நகரமான அலஸந்தாவுடன்சேர்த்து எழுதப்பட்டுள்ளது. இப்படி யெழுதுவதனால் இவ்விரண்டிடங்களும் ஒன்றற்கொன்று சமீபத்திலே யேயிருந்திருத்தல்வேண்டுமென்ப தவசியமன்றேயாயினு மிவ்விடத்திய

சந்தர்ப்பத்தைநோக்கின், பல்லவபொக்கமென்பது விந்து ஸௌராஷ்டிரங்களுக்குச் சமீபத்திலிருந்திருத்தல்வேண்டுமென்றுதோன்றுகிறது. இதனாற் பல்லவர்கள் இக்காலத்திற் காஞ்சிநகர்ப்புறத்துக் குடியேறினாரல்லரென்றுகொள்ளலாம். காப்பியங்கள், கல்வெட்டுக்கள், தாம்ரஸாஸனங்க ளிவைகளாற் பெயர்பெற்று கி. பி. ஐந்தாம்நூற்றாண்டுமுதல் தமிழ்நாட்டில் உயர்வுற்றோங்கியபல்லவர்கள் மஹாவம்சப்பிரகாரம் இக்காலத்தில் தென்றிசைவந்தவரல்லர்.

தமிழ்க்காப்பியங்களையேசோதிக்குமிடத்தும் இதேகொள்கை காணக்கிடைப்பதால் இது தமிழ்ப்பாஷைச்சரித்திரத்துள் மிகவும் முக்கியமானகொள்கையாய்நிலைபெறும்.

கி. மு. 44-ல் அரசுபெற்று, உடனே தமிழர்பா லரசிழந்து கி. மு. 29-ல் மறுபடியும் தன்னுரிமையைப்பெற்ற வட்டகாமணியின் ஆட்சிக்காலத்தில் மஹாவம்சம் தென்னிந்தியசரிதத்தோடு சம்பந்தப்படுகிறது. ஆட்சிபூண்டவுடன் இவ் வட்டகாமணிக் கிரண்டபாயங்கள் நேர்ந்தன. ஒன்று, வெளிநாட்டுத் தமிழர்கள் படையெடுத்துவந்தது. இரண்டாவது உள்நாட்டு ரொஹணத்திலிருந்த திஸ்ஸனென்னும் பார்ப்பனன் படையெடுத்ததாம். வட்டகாமணி முதலில் இப்பார்ப்பனனையும் தமிழர்களையும் போர்புரியவிட்டுத் திஸ்ஸனை அழிவுபெறச்செய்தான். தமிழர்களைத் துரத்தத் தன்னாலியலவில்லை. அவர்களிடம் தோல்வியடைந்து,புறங்கொடுத்தோடிப் பிறகு ஒரு பிக்ஷுவினுபகாரமூலமாய்த் தன்குடிகளில் ஒருவனிடம் பதினான்குவருஷம் மறைந்துவதிந்தான். தன் இரண்டு ராணிமார்களோடும் இரண்டு இளங்குமாரர்களோடும் உயிர்மீட்கவோடுவோன், இளையளாகிய ஸோமலாவென்பவளையும், தன் கிரீடத்தையும், பௌத்தபிச்சைப்பாத்திரத்தையும்விட் டோடவேண்டியதவசியமாயிற்று. ஓடுங்கால், தன்முடியைமாத்திரம் ஸோமலாவினிடங்கொடுத்துப் பிச்சைப்பாத்திரத்தை வெஸ்ஸகிரிக்காட்டில் ஒளித்துவைத்துவிட்டுப்போனான். இத்தருணம் படையெடுத்துவந்த ஏழு தமிழர்களில் ஒருவன் ஸோமலாதேவியையும் அரசன்முடியையும் தன் பாற்படுத்திக்கொண்டு திரும்பிப்போய்விட்டான். மற்றொருவன் பௌத்தபாத்திரத்தைக்கொண்டு திரும்பினான். மற்ற ஐவர்களும் பதினான்குவருஷம் ஏழுமாதம் ஆண்டார்கள். இவ்வைவரில் முதல்வன்

புலஹத்தன் என்போன். இவன் கபிலர்பாடிய குறிஞ்சிப்பாட்டுக்குக் காரணனாயிருந்திருக்கலாமோவென்னும் சங்கை யுண்டாகிறது. இவன் தன் படைத்தலைவனாகிய பாஹியன் என்பவனாற் கொலையுண்டான். இப்பாஹியன் தன் தளகர்த்தனாகிய பணயமாறனாலும், இவன் பிளைய மாறனாலு மிவன் தாடிகனென்பவனாலும் முறையே நாசமடையத் தாடிகன் வட்டகாமணியாற் றோல்வியடைந்தான். ஸோமலா, பிச்சைப் பாத்திரம் என்பவற்றுக்கும் பணயமாறன், பிளையமாறன் இப்பெயர்களுக்கும் ஏதேனும் குறிப்புக்கள் தமிழ்நூலாராய்ச்சியில் நேரலாம். பிளையமாறனுக்கும் பழையன்மாறன்என்னும் மோகூர்த்தலைவனுக்கும் ஏதேனும் பொருத்தமுண்டோவென்றுபார்க்கவேண்டும். இச்செய்திகளில் இரண்டுசிறுவிவரங்கள் அக்காலத்திய மதநிலைமைவிஷயத்தைப் புலப்படுத்தும். வட்டகாமணி ஓட யத்தனிக்குந்தருணத்தில், கிரியென்னும் ஜைனமுனிவரொருவர் "பெரியகரியசிங்கம் ஓடுகிறது" என்று களிப்புற்றுக்கூவினாராம். இவ் வபசாரத்திற்காக வட்டகாமணி தன் பதம்பெற்றபிறகு அந்த ஜைன ஆச்சிரமத்தையழித்து அபயகிரிவிஹாரமென்னும் பௌத்தவிஹாரத்தைக் கட்டினனாம். இதனால், ஜைன ஆச்சிரமங்களையழித்துப் பௌத்தவிஹாரங்கள் கட்டப்பெற்ற தரிதன்றென்பது ஒருதலை. வட்டகாமணிக் குதவிபுரிந்த ஏழுபடையாளரும், தங்களிலொருவனுக் கரசன் நடாத்திய கொடுமையேகாரணமாக வட்டகாமணிக்குப்பகைவர்களாய்த் தமிழருடன்சேர்ந்து படைத் தொழில்புரியமுயன்றபொழுது பௌத்தபிக்ஷு ஒருவர் நடுநின்று தருமம் அவ்வரசனால் நிலைபெறுமோ? தமிழரால் நிலைபெறுமோ வென்றுகேட்டு, அரசனாற்றான் என்றுரைத்து, அவர்களைச் சமாதானப்படுத்தி, யரசனோ டுடன்படுத்தினர். இதனால், தமிழர்கள் பௌத்த மதத்துக்குவிரோதிகளாயிருந்தார்களென்றுவிளங்கும்.

இவ்வரசன் தன்னுரிமைபெற்றவுடன் ஸோமலாதேவியைவரவழைத்து, அவளைமுன்போல் மஹாதேவியாய்விளங்கச்செய்து அவள் பெயரால் மணிசோமாராமம் என்னும் பௌத்தப்பள்ளியையும் சமைத்தான். இப்பெயரில், தேவியின்பெயரும் சூளாமணியின்பெயருங் கலந்துநிலவ இப்பெய ரளித்தனனென்ப. இவ்வரசனாட்சிக்காலத்திற்றான் மூன்று பௌத்தபிடகங்களும், அட்டகதையும் எழுதப்பெற்றன.

வட்டகாமணிக்குப்பின் அவன்மக்க ளிருவர் வரிசையாயாண்டார்கள். அதி லிரண்டாமவன் பௌத்தனல்லன். ராஜத்துரோகி. இவன்பெயர் சோரநாகன். இவன் ராணி அநுலையென்பவள். இவளுக்கு ஒருவர்பின்னொருவராய்வந்தகாதலர்களில் இருவர் தமிழராவர். இவர்கள், பட்டணத்துத்தச்சன் வடுகனும், தமிழப்பார்ப்பனன் நீலியனென்பவனுமாவர்.

இதற்குப்பின் தென்னிந்தியா, இளநாகனுட்சிக் (கி. பி. 95-101) காலத்திற் குறிப்பிடப்படுகிறது. இவ் விளநாகனுட்சிக்கால ஆரம்பத்திலேயே லம்பகன்னரென்னுங்குழுவினர் குடிக்கலகஞ்செய்தெழுந்தனர். இளநாகன் தேசப்பிரஷ்டனுய் இந்தியாவில் மூன்றுவருஷம் வதிந்து, ஒரு படையோடுதிரும்பிவந்து துரோகஞ்செய்த லம்பகன்னரைத்தோற்கச்செய்து மறுபடியும் தன்னுரிமைபெற்றனன். சில் காலஞ்சென்றபின் மறுபடியும் லம்பகன்னர்கள் கலகஞ்செய்து அரசனைச் சிறைப்படுத்தினுர்களென்றும், அத்தருணத்தில் அரசி தன்மகனுகிய சண்டமுகசிவனென்னும் சிறுகுழந்தையைப் பட்டத்துயானையின் முன்வைத்து "இவன் நின்னரசன்மகன்; அரசன் சிறைப்பட்டான்; சத்துருக்கள்பாற்பட்டு இக்குழந்தை மரணமடைவதைக்காட்டிலும், நின்னிட மந்நிலைபெறுவது நலம். ஆகையால் நீ இக்குழந்தையைக் கொல்லக்கடவா"யென்றுசொல்லியனுப்ப, அந்த யானையானது கட்டுத்தறியைமுறித்து அரமனையுட்புகுந்து அரசன் சிறைப்பட்டிருந்த அறையைத்திறந்து அரசனைத் தன்பிடரியிலேற்றிச்சென்று கடற்றுறையிற்காத்திருந்த மரக்கலஞ்சேர்த்துப் போயதென்றும் மஹாவம்சம் சொல்லும். இத்தகையகதை வேறுமாதிரியானவிவரங்களோடு கரிகாற்சோழனுக்குவழங்குவது எல்லோர்க்குந்தெரிந்ததேயாம். இச் சண்டமுகசிவனுடைய ராணிக்குத் தமிழ்த்தேவியென்றுபெயர்.

கி. பி. 263—285-ல் வோஹாரிகதிஸ்ஸனுட்சியிற் சகோதரசச்சரவுகாரணமாக யுத்தம் ஒன்று நிகழ்ந்தது. இவ்வரசன் தெளிந்தாளும் திறத்தனுய்ச் சரீரஹிம்ஸைத்தண்டனைவிதிப்பதைத் தவிர்த்தனன். இவனுட்சிக்காலத்தில் மதக்கொள்கைமாருட்டங்கள் நிகழ்ந்தனவென்றும், இம்மாருட்டங்களில் வேதுல்ய அல்லது வைபுல்யக்கொள்கை யதிகரித்து இவனு லடக்கித்தணிக்கப்பட்டதென்றுங் கூறுப. இவன்றம்பியாகிய அபயனென்போன் மகாராணியிடங் களவொழுக்கஞ்செய்து,

அது கண்டறியப்பட்டு உயிர்பிழைக்க இந்தியாதேசத்துக் கோடிப் போந்தவன் துரோக எண்ணமுள்ள மாமனொருவனாலும், தமிழர்களா லும் உதவிபெற்றுப் படையெடுத்துவந்து தன்முன்னோனரசையும், அரசியையு மபகரித்துக்கொண்டான்.

கி. பி. 296-ல் இருந்து 315-வரைக்கும் இலங்கை லம்பகன்னர் வசப்பட்டு அவர்களா லாட்சிபெற்றிருந்தது. இவ்வரசர்கள் ஸங்கதிஸ் ஸன், ஸங்கபோதி, கோடகாபயன் என்னும் மூவருமாவர்.

இவர்களி லிரண்டாமவன் மதாபிமானி. புராதனகாலத்திய அபிப் பிராயப்பிரகாரம் இத்தகைய அபிமானமும் ஆட்சித்திறமையும் ஒருங்கு நிற்பதில்லை. மந்திரி-கோசாதிகாரியாகிய கோட்டகாபய னதீனமாய்க் கலகம்பிறக்கவே அரசன் உயிர்பிழைக்க ஓடினான். இந்தநிலைமையில் ஒரு பிச்சைக்காரனெதிர்ப்பட்டு அவன்கொடுத்தவுணவையுண்டு அவ்வுதவிக்குக்கைம்மாறாகத் தன்தலையைவெட்டியெடுத்துக்கொண்டு போய் ராஜ்யாபகாரியான கோட்டகாபயனுக்குக்கொடுத்து, அதற்காக ஏற்படுத்தியிருந்த விலையைப்பெற்றுக்கொள்ள அனுமதிகொடுத்தான். அப்பிக்ஷுக னதற்கிணங்காமற் பின்வாங்கியதைக்கண்டு தானிருந்த இடத்திலேயே உயிரைவிட்டுக் கொலைக்குற்றமின்றி விலையைப்பெறு மாறுசெய்தான்.

இம்மாதிரியானகதைகள் ஏராளமா யெங்குங்கிடைப்பனவேயாயி னும், தமிழ்நாட்டில்வழங்கும் புறநானூற்று (பண்டித சாமிநாதைய ரவர்கள்பதிப்பு) 152, 162-ம் பத்திரங்களிற்கண்ட குமணன்கதைக் கும் இதற்கு முண்டானவொற்றுமை நோக்கற்பாலது.

இவர்களில் இறுதியிலிருந்த கோடகாபயன் ஆட்சிக்காலத்தில்(கி.பி. 302—315-ல்) வேதுல்யக்கொள்கைமாருட்டம் அதிகரிக்கவே அப்ய கிரிவிஹாரத்திற்சேர்ந்திருந்த இச்சார்பினரான அறுபதுபிக்ஷுக்களைத் தேசத்தைவிட்டோட்டி எதிர்த்தட்டான கடற்கரைப்பிரதேசத்திற் செல்லவிட்டான். இப்படித் தேசப்பிரஷ்டர்களானவர்களில் ஒருவரிட மடைந்து அவர்கள்கொள்கைகளை நன்குயறிந்த, சோழதேசத்தவனான ஸங்கமித்தன் என்னும் பிக்ஷு ஒருவன், சிறந்தமந்திரவாதியென்று பெயர்வாய்ந்து மஹாவிஹாரத்துட்டங்கிய பிக்ஷுக்களிடம் மிகவும்

வைரம்பூண்டவனு யிலங்கைக்குவந்து இவ்விருகொள்கைகளின்றிறமை யையும் பரிசோதித்துத் தீர்மானிக்கக்கூட்டிய கல்விக்கழகத்தில் முனை ந்துநின்றுவாதித்துப் பெருமைபெற்றனன். இவ்வாதத்தில் ஸங்க மித்தனின் மேம்பட்டதன்மையை மெச்சினவனுன அரசன், இச்சங்க மித்தனைத் தன்மக்களிருவரான ஜேட்டதிஸ்ஸ, மஹாசேனர்க்கு ஆசிரி யனுகநியமித்தான். ஸங்கமித்தன் இளையவனிடம்பாராட்டிய அன்பின்மேலீட்டால், கோடகாபயனுக்குப்பின் பட்டத்துக்குவந்த ஜேட்டதிஸ்ஸனுடைய அபிமானத்திற் காளாகாமற்போயினன். இவ் விருசார்பார்க்கும் விரோதமதிகரிக்க, வைதுல்யச்சார்பார், இறந்து போன அரசன்சவத்துக்குச்செய்யவேண்டியமரியாதையையுஞ் செய் யாமல் நிற்கவே, ஜேட்டதிஸ்ஸன்வெகுண்டு, இத்தன்மையரான நியம மற்றசந்நியாசிகளையெல்லாங் கொலைபுரிய ஆக்ஞைசெய்தான். தன் னுயிர்க்குப் பயந்தவனுன ஸங்கமித்தனே தன் பிரியசிஷ்யனுன மஹா ஸேனனுக்கு ஆட்சிவருமளவும் இந்தியாதேசத்திலேயே நிலைபெறும் எண்ணத்தோடு அங்கேபோய்ச்சேர்ந்தான்.

கைகராசிரியர்கொள்கைக்கேற்ப, கி. பி. 325-ல் நின்று 352-வரைக்கும் ஆண்ட மஹாசேனன் ஆட்சிமுழுமையும் இம்மாதிரியான மதபேதச்சச்சரவிலும், இதேகாரணத்தால் ஒருசார்பார் மற்றைச் சார்பினோருடைய ஆச்சிரமங்களையழிப்பதிலுமே கழிந்தது. ஸங்க மித்தனும் சோணன் என்னு மொரு மந்திரியும் புதியதான வைதுல்யச் சார்பினர். மேகவர்ணபயனென்னும் மற்றோரமைச்சன் பழையசார் பினன். இவன் கலகஞ்செய்து அரசன்மேற்படையெடுத்துச் சிறிதுமட்டு மழிவுபெற்ற மஹாவிஹாரத்தை முன்னிருந்தாற்போற் கட்டிக்கொடுப் பதாயரசன்வாக்களித்தபிறகுதான் கலகத்தினின்றுந்தவிர்ந்தான். இவர் களுக் கெதிரியாயிருந்த சோணவமைச்சனும், சோழதேசத்தியஆசிரிய னும் ராணிமார்களி லொருத்தியின்சகாயத்தாற் கொலையினின்றுநீக்கப் பெற்றார்கள். ஆனல் இறந்த ஆசிரியனிடத்துக்குத் திஸ்ஸனென்னு மற்றொருவன்வந்துசேர மஹாவிஹாரம் மறுபடியும் பாழ்படவேண்டிய தாயிற்று. இச்செய்திகளால் நாட்டிற் சமாதானநிலை சிறிதும் இல்லா திருந்ததென்று தோன்றும். இத்தகையவிவாதங்களில் மிகவும் உபயோகமான ஒருகூற்றுத் தென்படுகிறது. அதாவது இம்மஹா ஸேனன் ப்ராம்மணதெய்வங்கள் தங்கிய அநேகஆலயங்களை யழித்தா னென்பதாம். இவைகளையெல்லாமழித்தது மணிஹீரவிஹாரங்கட்டுவ தற்காகவென்றும் வரைந்துள்ளது.

இம்மஹாவம்சத்துட்கண்டுள்ள காலவரையறைவிவரங்களில் எவ்வளவு அபிப்பிராயபேதங்களுக் கிடனிருப்பினும் கைகராசிரியராராய்ச்சிக்குப்பின் இவ்விதிஹாசங்களிலடங்கிய காலக்கூற்றின் பெரும்பிரிவுகளைப்பற்றிச் சிறிதும் ஐயப்பட இடனில்லையென்னலாம். கைகர் என்பவருடைய சித்தாந்தத்திற் பொதுப்படையான ஆக்ஷேபணையொன்றுந் தோன்றவில்லை. இவர்கூறியுள்ளவருஷங்களும் பொதுப்படையாயங்கீகரிக்கத்தக்கவையே. இம்மஹாவம்சத்தி லடங்கிக்கிடக்கும், இந்தியதேசசம்பந்தமானகுறிப்புக்களையெல்லாம் ஒருங்கேதிரட்டி, இவைகளைப்பற்றி இத்தேயத்தினின்றுகிடைக்கக்கூடியசான்றுகளையும் சேர்த்து ஒத்துநோக்கி ஆராய்ச்சிசெய்தாற் சிலவிஷயங்களேனும் உறுதிபெறும். ஆனால் மஹாவம்சத்தைப்போன்ற காலவட்டவணைகொண்ட கிரந்தங்கள் நம்பால் யாதுமில்லையென்பதை மறத்தல்கூடாது. இது வியசனிக்கத்தக்கதேயாயினும் இதினின்று சில அனுகூலங்களுமுண்டு. எப்படியென்றால் நமக்குக்கிடைக்கும் சிலவிஷயங்கள் முற்காலநிகழ்ச்சிகளைத் தற்செயலாய்த்தெரிவிப்பனவாகையால், வாஸ்தவக்கூற்றென்றுகொள்ள இடமுண்டு.

இத்தகையவாராய்ச்சிக்குச்சாதனங்கள் தமிழ்க்காப்பியங்களே. இவைகளிற் சிலவேனு மிக்காலத்தனவென்றுசொல்லவேண்டியவையாயிருக்கின்றன. இம்மஹாவம்ச மிவ்விஷயத்தி லேதேனு முதவிபுரியுமா? என்று ஒத்துப்பார்த் திவ்வகையாராய்ச்சியைச்செய்வதற்குவேண்டிய சாதனங்களை எம்மாலியன்றமட்டுமுதவவேண்டுமென்னும் எண்ணத்தாலேயே இவ்வியாசம் எழுதப்பட்டது. இங்கு யாமெடுத்துக்காட்டிய விஷயங்களினின்றும் ஒருவிஷயம் நன்குய்ப்புலப்படுகிறது. அதாவது இலங்கைத்தீவுக்கும், இதற்கெதிர்ப்பட்ட கடற்கரைமாகாணங்களுக்கும், முக்கியமாய்ச் சோழதேசத்திற்கும், வெகுவாய்ப் போக்குவரத்துண்டென்பதாம். தவிர இலங்கையில் பிராம்மணர்குடியேறியிருந்தார்களென்பதும், பிராம்மணர்களின் ஆலயங்கள் நிலைபெற்றிருந்தனவென்பதும், சோழதேசத்திலிருந்துவந்தபௌத்தசாகை மஹாயானமென்பதும், மேல் இந்தியாவினின்றுவந்தது ஹீனயானமென்பதும் காணக்கிடக்கின்றன. இக்கொள்கைகளையுறுதிப்படுத்தும் சாதனங்கள் தமிழ்க்காப்பியங்களினின்று ஏதேனுங்கிடைத்தல் சாத்தியமோ?

இவ்வாறுன பலவினுக்களுக் குத்தரஞ்சொல்ல யாம் இப்பொழுது முயற்சிசெய்வது முடியாது. இவைகளையெல்லாம் முன்னிட்ட ஆராய்ச்சி சாவகாசமாய்ச்செய்யத்தக்கது. மஹாவம்சத்திற் கஜபாகு இந்தியாவுக்குவந்ததாகவாவது, பத்தினிதேவிக்குக் கோயில்சமைத்த தாகவாவது சொல்லவில்லை. சிலப்பதிகாரத்தில் ஒரு கஜபாகு இவ் விரண்டுசெய்தியையும்நிகழ்த்தியதாகக் காணக்கிடைக்கிறது. இவ்விரு செய்தியும் பௌத்தர்கள் சொல்லியேதீரவேண்டுமென்பதற்கு நிர்ப்பந்த மானகாரணந் தோன்றவில்லை. வேறு இலங்கை இதிஹாஸங்களில் இச் செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. அவைகள் பிற்காலத்தன. தென் னிந்தியாவிற் கிழமைகள் கி. பி. ஆறும்நூற்றுண்டுக்குமுன் ஆட்சிபெற வில்லையென்பர் ப்ளீட். இக்கொள்கையை ம-ா-ா-ஸ்ரீ ஸ்வாமிக்கண் ணுப்பிள்ளையவர்க ளங்கீகரிப்பர்போலும். இத்தகையகொள்கைக்குத் தென்னிந்தியபிரமாணம் ஏதாவதுண்டாவென்பது விசாரிக்கத்தக்க செய்தி. இவைகளையெல்லாம் வேறொருமுறைவிசாரிப்போம்.

எஸ். கிருஷ்ணஸ்வாமிஐயங்கார், எம் ஏ.

உ

மழவர்*

மழவரென்னுஞ்சொல் சாதாரணமாக இளையோர் (வீரர்) என் னும்பொருளைத் தரும். "மழவுங்குழவுமிளமைப்பொருள" "ஏவலிளை யர்தாய்வயிறுகரிப்ப" என்பனவற்றால் இது பெறப்படுவதாம்; இனிப் புறநானூற்றுரையாசிரியரும் இச்சொற்கு வீரர் என்றபொருளையே எழுதிச்செல்வதூஉங் காண்க. (புறம் 88, 90)

இஃ திவ்வாறிருந்தும், சரித்திரம், பூகோளம், கலைஞானம், (Science) முதலிய எல்லாவற்றாலும் உற்றுநோக்கின், தற்காலம்

---

* இது, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றும்வருடோற்சவத்தில் (18-5-15) ஸ்ரீமான்-உ. வே. சாமிநாதஐயரவர்களின் அக்கிராசனத்தின்கீழ்ப் படிக்கப்பெற்றது.

மேனாட்டுக்கலையுணர்வுடையாருக்கும் பெருத்த உவப்பும் வியப்புந் தரத்தக்கதும், உலகமலைவு, ஆகமமலைவுமுதலிய எவ்வகைமலைவும் நேரா வண்ணம் மிக நுணுகி ஆழ்ந்துசெல்வதுமாகிய உரையையெழுதும் நமது பெருவாழ்வாகிய ஆசிரியர்நச்சினார்க்கினியர், 'மழவர் - சிலவீரர்' எனவுரைத்து "உருவக்குதிரைமழவரோட்டிய, நெடுவேளாவி" யென ஆதாரமுங்காட்டிநிறுவினர். (மதுரைக்காஞ்சி 395)

நான் பண்டிதபரீக்ஷைக்கு மதுரைக்காஞ்சிபடிக்குங்கால் அதனுரையாசிரியர் இச்சொற்குச் சிலவீரர் என்றெழுதுவானேனென்னும் ஐயம் எழுந்து என்மனத்தி லுறுத்துவதாயிற்று. பின்னும் அதனைப் பற்றி யாராய்வுழி யெனக்குக்கிடைத்த சிலஆதாரங்கள் ஒருவாறு விளக்கமெய்துவித்தன. அவற்றையே யிங்கு எழுதத்துணிந்தனன்.

"நிலப்பெயர்குடிப்பெயர்" என்னும் பெயரியற்சூத்திரப்படி, கொங்குநாட்டிலுள்ளோர் 'கொங்கர்' குடநாட்டிலுள்ளோர் 'குடவர்' என நிலம்பற்றிப் பெயரெய்தினமைபோல, மழநாட்டிலுள்ளோர்களாதலின் இவர்கள் 'மழவர்' எனப் பெயர்பெற்றவராவர்.

தமிழகத்தின் பண்டைய பெரும்பிரிவுகளாகிய சேரசோழபாண்டி மண்டலங்கள், தம்முட் பல சிறுபிரிவுகளையுடையவாயிருந்தன. அவற்றுள், சோழமண்டலம், மேற்காநாடு ("அகன்பணைநீர்நாட்டுமேற்கா நாட்டாதனூர்"1) கோனாடு ("செழுந்தளிரின்புடைமறைந்தபெடை களிப்பத்தேமாவின், கொழுந்துணர்கோதிக்கொண்டுகுயினாடு கோனாடு"2) மழநாடுமுதலிய உண்ணாடுகளையுடையதாயிருந்தது. இம் மழநாடே மழவரது தாய்நாடாம். இஃது இந்நாட்டினதென்பதை, "நீடுவளத்ததுமேன்மழநாடெனும்நீர்நாடு"3 என்னும் சேக்கிழார்சுவாமிகளின்திருவாக்கான் அறிக.

இந்நாடு, கொள்ளிடத்தின்வடகரைதொட்டுச் சிலகாததூரம்வரை பரவியிருக்கின்றது. 'ஐயன்வாய்க்கால்' 'பெருவளவாய்க்கால்' பங்குனியாறு' என்னுங் கால்வாய்கள் இந்நாட்டிற் பெரும்பாகங்களிற்பாய்கின்றன.

---

1 பெரியபுராணம் திருநாளைப்போவார் (1)
2 ஷை இடங்கழிநாயனார் (1)
3 ஷை ஆனாயநாயனார் (1)

திருமழபாடி அன்பிலாலந்துறை* திருமாந்துறை* திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் பாடல்பெற்றதலங்களும் "பண்டெழுவர்தவத்துறை4" என்னும் வைப்புத்தலமாகிய லால்குடியும் இந்நாட்டினகத்தன.

"அங்கணகன் றம்மருங்கிலங்கணர்தம்பதிபலவும்மணைந்துபோற்றிச்
செங்கமலப்பொதியவிழச்சேல்பாயும்வயன்மதுவாற்சேறுமாறாப்
பொங்கொலிநீர்மழநாட்டுப்பொன்னிவடகரைமிசைப்போய்ப்புகலிவேந்தர்
நங்கள்பிரான் திருப்பாச்சிலாச்சிராமம்பணியநண்ணும்போதில்"

என்னுஞ்செய்யுள்5 திருப்பாச்சிலாச்சிராமம் இந்நாட்டினதென்பதைத் தெளிவுறுத்தும். மேற்கூறியதலங்களுள் மழபாடி என்னுந் தலத்தின் பெயர்க்காரணமும் இங்குக் கவனிக்கத்தகுந்தது. இன்னும், நமது ஆனாயநாயனாரின்சென்மஸ்தலமாகிய மங்கலம்* என்னுந் திருப்பதியும் இந்நாட்டினகத்ததே. இதனை,

"பொங்கரில்வண்டுபுறம்பலைசோலைகள்மேலோடும்
வெங்கதிர்தங்கவிளங்கியமேன்மழநன்னாடாம்
அங்கதுமண்ணிலருங்கலமாகவதற்கேயோர்
மங்கலமாயதுமங்கலமாகியவாழ்மூதூர்"

என்னுந் தெய்வவாக்கானும்6 அறியலாம். மணக்கால்நம்பியென்னும் ஒரு வைணவ அடியாரின் ஊராகிய மணக்கால்* என்னும் பதியும் இந்நாட்டினதே.

மேற்கூறிய திருப்பாச்சிலாச்சிராமத்தில் ஒரு சிவனடியார் கொல்லி மழவரெனப் பெயர்பெற்றிருந்தமை பெரியபுராணத்தாற் றெரிகின்றது. இதனால் இந்நாட்டினர்க்கு மழவர் என்னும் பெயருண்மை தெற்றென விளங்கும். இப்பிரதேசத்தின் ஒருவகை வேளாண்மாந்தர் (கள்ளர்)க்கு மழவராயர் என்னும்பெயர் இன்றும்வழங்குகின்றது. இன்னும், ஸ்மார்த்தமறையோரில் ஒருவகையினர் (பிரகச்சரணர்) மழநாட்டார் என வழங்கப்பெறுகின்றனர்.

இவற்றால் மழநாடென்பது இவ்விடத்ததென்பதூஉம் இந்நாட்டினர்க்கே மழவரென்னும்பெயர் உரியதென்பதூஉம் பெற்றாம்.

---

* இவைகள் லால்குடிக்குச்சமீபத்திலிருக்கின்றன.

4 திருநாவுக்கரசுசுவாமிகள் அடைவுத்திருத்தாண்டகம் (11)

5 திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்புராணம் (310)

6 ஆனாயநாயனார்புராணம் (7)

தற்காலம் நமது இந்தியப்படைஞர்களிற் சீக்கியர்களும், கூர்க்கர்களும் சிறந்தவராயிருத்தல்போல இவர்கள் அக்காலத்துப்போர்வீரர்களிற் சிறந்துவிளங்கினவராவர். இவர்க ளிவ்வாறிருந்தமையானே பண்டை நெடுமுடிவேந்தரும் குறுமுடிவேந்தரும் இவர்களைப் போர்த்துணைமைகொண்டிருந்தனர்.

"குவியற்கண்ணிமழவர்மெய்ம்மறை"
"வாலூண்வல்சிமழவர்மெய்ம்மறை"

எனவரும் பதிற்றுப்பத்தால் (21, 55) முறையே இமயவரம்பன்தம்பி பல்யானைச்செல்கெழுகுட்டுவனும், ஆடுகோட்பாட்டுச்சேரலாதனும் படைத்துணைமைகொண்டதும்,

"ஒளிறிலங்குநெடுவேல்மழவர்பெருமகன்"
"வழுவில்வண்கைமழவர்பெரும"

எனவரும் புறப்பாட்டால் (88, 90) அதிகமானெடுமானஞ்சி படைத்துணைமைகொண்டதும் அறியப்பெறும்.

இவர்கள் ஓரரசன்கீழ்ப் போர்வீரராயமைந்து போர்புரிந்தது மன்றித் தாங்களே யொரு பெருங்குழுவினராய்ச்சேர்ந்துகொண்டு போர்புரியும்வழக்கமுடையராயு மிருந்தனர். இது, "உருவக்குதிரை மழவரோட்டிய" (அகம்) எனவும், "ஏனைமழவரைப்போரிற்சுருக்கி" (பதிற்றுப்பத்து) எனவும் வருஞ் செய்யுட்களால் அறியப்படுகின்றது.

ஒரு சேரமானுடன் அதிகமானெடுமானஞ்சி நேசமுடையனு யிருந்தானென்று புறநானூற்றாற் றெரிகின்றது. சேரவரசர்களும் அதிகமானும் மழவர்களைப் படைவீரராய்ப்பெற்றிருந்தமை முன்னர்ப் பெறப்பட்டது; இதனால், இவர்களுள் மழவரைப் படைஞராகக் கொண்டிருந்த ஒருவர் மற்றொருவருக்கு இப்படையையுதவினரோ? அல்லது இம்மழவர்களே தனித்தனி யிவர்களிடத்திற் படைமை யமைந்தனரோ? என்று எண்ணவேண்டியிருக்கிறது.

"மழவர்மெய்ம்மறை" எனக்கூறப்பட்ட ஆடுகோட்பாட்டுச்சேரலாதன், "ஏனைமழவரைப்போரிற்சுருக்கி"னன் எனக் கூறப்படலால் ஒவ்வொருபெருங்கூட்டமாய்ச்சென்று அரசரோடெதிர்க்குமிவர்களிற் சிலகூட்டத்தை அவன்வென்று தன்கீழ்ப்படுத்திக்கொண்டானென்றும், கீழ்ப்படிய உடன்படாதவர்களைச் சிதறவடித்துத் துரத்தினன் எனவும் தெரிகின்றது.

இனி, இவர்களது பழக்கவழக்கங்களாவன :—

" தீம்புழல்வல்சிக்கழற்கான்மழவர்" (மதுரைக்காஞ்சி)

" செவ்வூன்றோன்றுவெண்டுவைமுதிரை
வாலூண்வல்சிமழவர்" (பதிற்றுப்பத்து)

என்பவற்றால், இவர்கள் உண்ணும் உணவுக்குப் பக்ஷணங்களையும், வீரர்க்குரிய வேறுவித உணவினையும் பெரும்பாலும் உபயோகித்து வந்தனரென்பது தெரிகின்றது; இனிப் பதிற்றுப்பத் துரையாசிரியர் "செல்வச்செருக்காற் சோறுண்பதுபெரிதன்றி............(இ)வற்றை யுணவாகவுடையவீரர்" என் றெழுதுவதும் ஈண் டுணரத்தக்கது.

"பூந்தலைமழவர்" என்னும் மதுரைக்காஞ்சியானும், "குவியற்கண்ணிமழவர்"* என்னும் பதிற்றுப்பத்தானும் இவர்கள் (போர்ப்பூமாலையும், தங்கள் அடையாளமாலையுமாகிய) பூச்சூடிக்கொள்வதில் மிக்க விருப்பினரென்பதும் தெரிகின்றது.

இன்னும், "மழவர்முழவின்னோன்றலைகடுப்பப், பிடகைப்பெய்த் கமழ்நறும்பூவினர்" என்னும் மதுரைக்காஞ்சியால், இவர்கள் ஒருவகைப் போர்ப்பறையினைத் தங்களிற்கொட்டிக்கொண்டுசெல்லும் வழக்கமுடையரென்பதூஉம், " உருவக்குதிரைமழவர் " (அகம்) " மைபடுபெருந்தோண்மழவரோட்டி, யிடைப்புலத்தொழிந்தவேந்து கோட்டியானை " (மதுரைக்காஞ்சி 607.) என்பவற்றால் இவர்கள் குதிரைப்படைஞராயும், யானைவீரராயுமிருந்தனரென்பதூஉம் முறையேபெறப்படும்.

பின்வரும் புறப்பாட்டுக்கள் இவர்கள் வீரத்தை விளக்குகின்றன:— அவை,

" யாவிராயினுங்கூழைதார்க்கொண்
டியாம்பொருதுமென் றலோம்புமினோங்குதிறல்
ஒளிறிலங்குநெடுவேன் மழவர்பெருமகன்
கதிர்விடுநுண்பூணம்பகட்டுமார்பின்
முழவுத்தோளென்னையைக்காணாவூங்கே" (88)

* 'வெட்சிமுதல் வாகையீறாகியபூக்களெல்லாம் குவிதற்குக் காரணமாகிய கண்ணி' என்பது அதன் பழையவுரை.

(மழவர்தலைவனான என்னையை (அதிகமானை)க் காணாதவிடத்தில், யாவ ராயினும் யாம் அவனோடுபொருவோம் என்று சொல்லுவதைப் பாதுகாவுங்கள் என்பது இதன்கருத்து.)

"...........வழுவில்வண்கைமழவர்பெரும
இருநிலமண்கொண்டுசிலைக்கும்
பொருநருமுளரோநீகளம்புகினே" (90)

(மழவரையுடையநீ களம்புகின் வேறுபொருநரும் அங்கு உளராவரோ என்பது இதன்கருத்து) என்பனவாம்.

இன்னும், வேளிர்தலைவனான ஆவியென்பானோடும், சேரமானோடும், பாண்டியனோடும் எதிர்த்துப்பொருதவீரர்கள் இவர்களென்பது மேற்கூறியவற்றால்விளங்குகின்றமையானும் அவ்வரசர்களைப்புகழவந்த புலவர்கள் இவ்வீரர்களைவென்ற சிறப்பினைப் பாராட்டிக்கூறுகின்றமை யானும் இவர்கள்வீரம் நன்கு அறியக் கிடக்கின்றது.

இவர்கள் இவ்வாறு சிறந்திருந்தகாலம் ஸ்ரீமத்: மு. இராகவையங் காரவர்களின்தீர்மானப்படி*பார்க்கின் இரண்டாயிரவருடங்கட்கு முற்பட்டதென்னலாம்.

இதுகாறுங்கூறியவற்றாற் கொள்ளிடத்தின் வடகரைக்கண்ணதாகிய மழநாட்டினரே மழவரென்பதூஉம், இவர்கள் தமிழகப்போர் வீரர்களுள் மிகச்சிறந்தவரென்பதூஉம், அவர்களின் பழக்கவழக்க முதலியன இன்னவென்பதூஉம்,மழவரென்னுஞ்சொல் தற்காலத்தமிழ் மக்கட்குப் புதுவதாய்க்கேட்கப்படினும், மழவராயர் என்னும்பெய ருடையோர் அதன் தொன்மையை ஞாபகப்படுத்திக்கொண்டிருக்கின் றனரென்பதூஉம் பெற்றாம்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் குறித்தகுறிப்பை யடியாகக்கொண்டும், இங்கு அக்கிராசனராகவீற்றிருக்கும் நமது பேராசிரியர் (மஹாமஹோபாத்தியாயர்) உ. வே. சாமிநாதையரவர்கள்செய்துவைத்த பேருதவியானும் எழுந்த இவ்வியாசம் இதனோடுமுடிகின்றது.

அ. கந்தசாமிப்பிள்ளை.

---

* வேளிர்வரலாறு 19-ம்பக்கம்.

ஒருதாய் தன்குழந்தையைப்பற்றிக்கூறியது.

("சில்ட்ரன் மகஜீன்" என்னும் "ஆங்கிலப்பிள்ளைகள்பத்திரிகை"யின் 1914-ம் வருஷத்து ஜனவரிமாதச்சஞ்சிகையின் 83-வதுபக்கத்திற் பிரசுரமாயிருக்கிற ஒருபாடலின்கருத்தைத்தழுவியெழுதியது.)

"துணிவுடைச் சிறுநர! சொல்லுதி இன்னே,
உன்னாற் பெறலாம் ஊதியம் என்னே?
என்பயன் நின்னா லென்ப தறியேன்.
சொல்ல வல்லையேல், சொல்லுதி வல்லே.
தாமரை யிதழெனத் தயங்குகை விரலாய்!
திங்களை வளைந்து திகழ்கரு முகில்போற்
சுந்தர வதனம் சூழ்ந்து தொங்கி
இருண்டு சுருண்டெழில் எறிக்குங் குஞ்சியாய்!
ஒருநாள் போல உறுபல நாளும்நீ
செய்சிறு குறும்புக் கெய்தள விலையால்.
யாவது நின்னால் ஆவ தென்ன
உன்னாற் சொல்ல ஒல்லு மென்னில்,
நன்குசிந் தித்து நவிலுதி வல்லே"
என்றனன். என்றலும் இருசிற் றடிகள்
குறுகுறு நடந்தெனைக் குறுகியென் மடிமேல்
உற்றன. மிகுகளி ஒளிரெழில் இளவிழி
கூர்ந்தெனை நோக்கின. குறுநகை அரும்பின.
இருசிறு செங்கைகள் என்னிரு கதுப்பினை
இறுகுறப் பற்றியீர்த் தினிதி னணைத்தன.
"உனது வினவுக் குறுவிடை கேட்டி
அன்னாய்! யானனைக் கன்பு செய்தலே
என்னால் ஆம்பயன்" என்னப்
பவளவாய் பகர்ந்ததென் பாக்கியந் தானே.

வெ. ப. சு.

செல்வ நூல்;

ECONOMY.

"செந்தமிழ்" (தொகுதி-கங பகுதி க-ல்) ௯௫-ம் பக்கத்தொடர்ச்சி.

அத்யாயம்—21.

கோடுக்கல்வாங்கல்.

Money lending.

125. பணமுள்ளவன், தேவையுள்ளவனுக்குக் கடன்கொடுத்துக் குறிப்பிட்டவட்டி அல்லது லாபத்துடன் பிறகு வாங்கிக்கொள்ளுவதே **கொடுக்கல்வாங்கல்** அல்லது லேவாதேவியெனப்படும். இது செல்வ நூலில் அறியவேண்டிய முக்யஅம்சங்களில் ஒன்றாகும். ஒருவனுக்கு ஏராளமான பணமிருக்கலாம். அதை வியாபாரம், தொழில் முதலானவைசெய்து விருத்திசெய்யப் போதுமான அறிவாவது, ஆசையாவது இராது. அவனிடத்தில் அம் மிருந்தபணம், விருத்தியடைய மார்க்கமில்லாமற் கட்டிக்கிடக்கும். இன்னொருவன் சீமைக்குப்போய் நெசவு சாயங்காய்ச்சல்முதலானதொழில்களில் ஏதாவது கற்றுவரலாம். அவன் கற்றவித்தையைப்ரயோகித்துத் தன்க்ஷேமத்தையும் தேச க்ஷேமத்தையும்விருத்திசெய்யஹேதுவான தொழிற்சாலைகள், வர்த்தகங்கள்முதலானவை ஆரம்பிக்கப் போதுமானமுத லிராது. அவனிடத்தில் அறிவும் ஆசையுமிருந்தும் பயனில்லை. ஆகையால், பணமுள்ளவன் மற்றவனுக்குக் கடன்கொடுத்தால் அப்பணத்துக்கு வட்டியுங்கிடைப்பதோடு அறிவுள்ளவனும் அவனினத்தாரும் கடைசியாய்த் தேசமும் க்ஷேமமடையலாம். இதுதான் லேவாதேவியெனப்படும்.

126. நாணயம். (Credit) லேவாதேவி சரியானபடிநடப்பதற்கு நாணயம் என்பது முக்யமான அம்சம். இராமன் சேஷனுக்கு 1000 ரூபாய் கடன்கொடுக்கிறான். அப்பணத்தைக் குறிப்பிட்டகாலத்திற் சேஷன் திரும்பக்கொடுக்கச் சக்தியுள்ளவனாகவும் கொடுக்க மனமுள்ளவனாகவும் இருக்கவேண்டும். இவ்விருதன்மைகளும் சேஷனிடமிருந்தாற் சேஷனை நாணயமுள்ளவன் என்று சொல்லுவார்கள். இவ்விரண்டில் ஒருதன்மைகுறைந்தாலும் சேஷனிடம் நாணயமில்லையென்பதோடு, அவனைநம்பி யாரும் கடனுங்கொடுக்கமாட்டார்கள்.

127. கடன். (Loan) திரும்பக்கொடுப்பதென்ற ஒப்பந்தத்தின் பேரிற் பணமுள்ளவன், தேவையானவனுக்குப் பணவுதவிசெய்வதே கடன் எனப்படும். இதிற் கடன்கொடுப்பவனைக் கடன்காரன்* (Creditor) என்றும், கடன்வாங்குபவனைக் கடனாளி (Debitor) என்றும் சொல்லப்படும்.

கடன்கள் வெண்கடன் (Simple Loan) என்றும் பொறுப்புக் கடன் என்றும் இருவகைப்படும்.

128. வெண்கடன். யாதொருசொத்தும் ஆதரவில்லாமற் கடனாளியின் நபரையும், நாணயத்தையும்மாத்திரம்குறித்து வாங்கும்கடன் வெண்கடன் எனப்படும். இதனால், கடன்காரன் கடனாளியின்சொத்தை ஜப்திபண்ணமுடியாதென்பதல்ல. அவ்வாறு ஜப்திசெய்யுமுன், அந்தச் சொத்தைப் பராதீனம்செய்துவிட்டால், அந்தச்சொத்து அந்தவெண் கடனுக்குக் கட்டுப்படமாட்டாது என்பதுதான் இதன்கருத்து.

வெண்கடன் கைக்கடனாகவும் (Oral loan) இருக்கலாம். பத்திர மூலமாகவுமிருக்கலாம். பத்திரங்கள் வெண்ணிலை (unregistered)யாக இருக்கலாம். ரிஜிஸ்தர்செய்யவேண்டுமென்பது கட்டாயமல்ல.

129. பொறுப்புக்கடன். சொத்தைப்பொறுத்து வாங்கும்கடனே பொறுப்புக்கடன் எனப்படும். அது முறையே,

1. அடகு
2. அடமானம் அல்லது ஈடு
3. ஒத்தி

என்று முக்யமாய் மூன்றுவகைப்படும்.

130. அடகு. (Pledge) ஜங்கமசொத்தைப்பொறுத்து வாங்கும் கடன் அடகுகடன் எனப்படும். இதில் விசேஷமாய் நகை, பாத்ரம், சரக்குகள்முதலான ஜங்கமசொத்துக்களைக் கடன்காரர்வசத்திலேயே கொடுத்துவிடுவதுவழக்கம். ஆனால், வர்த்தகச்சரக்குகள், இலை, கரி, காய்முதலான அழிசரக்குப்பொருள்களை, கடன்காரரின்மேற்பார்வை யிற் கடனாளியிடம்வைப்பதுமுண்டு. நெல்வியாபாரி தன்கிட்டங்கியி லுள்ள 10000 மூட்டைநெல்லை ஜாமீன்கொடுத்து 10000 ரூபா கடன்

*கடன்காரன் என்னும்பதம் சிலசமயங்களில் வழக்கில், கடன்வாங்குபவனுக்கு ப்ரயோகிக்கப்பட்டபோதிலும், இதில் மேற்கூறியவாறே உபயோகிக்கப்படும்.

வாங்கினால், அந்தக்கிட்டங்கித் திறவுகோலைக் கடன்கொடுக்கும் பாங்கிக்காரர்வசத்திற்கொடுத்துவிடுவதுண்டு. நெல்வாங்குபவர்வரும்போது பாங்கிக்காரர் நேரேவந்துதிறந்துவிட்டு, நெல் அளந்து வசூலாகும் தொகையைத் தங்கள்கடனுக்குச் செல்வைத்துக்கொள்வார்கள்.

131. ஜாமீன். (Charge) இது ஸ்தாவரசொத்தால் ஏற்படுத்தும் ஒருவித பந்தகம்.

132. ஈடு அல்லது அடமானம். (Hypothecation) ஸ்தாவரசொத்தைப் பொறுத்துவாங்கும் கடனுக்கு ஈடு அல்லது அடமானம் என்று பெயர். இது ரிஜிஸ்தர்ப்பத்திரமூலமாய்த்தான் செய்யமுடியும். ஆனால், சொத்து, கடன்வாங்கினவன்வசத்தில்தா னிருக்கும். குறிப்பிட்டகாலத்தில் தொகைசெல்லாகாவிட்டால் ஈடுதார் (Hypothecator) வியாஜ்யம்செய்து ஈடுசொத்தைக் கோர்ட் ஏலத்தில் விற்பனைசெய்து தொகையைவசூலிக்கலாம். ஈட்டுக்குப்பிறகுசெய்யப்படும் எவ்விதபராதீனமும், ஈட்டுக்காரர் தொகைக்குக் கட்டுப்பட்டுத்தான் தீரும்.

133. ஒத்தி. (Mortgage in possession) இதுவும் ஷை ஈடுமாதிரிதான். ஆனால் இதில், சொத்து ஒத்திதார்வசம் விட்டுவிடப்படும். 100-ரூபாய்க்குமேற்பட்டதொகைக்கு ரிஜிஸ்தர்ப்பத்திரம்மூலமாய்த்தான் ஒத்திசெய்யமுடியும்; கடன்செல்லாகாதவிஷயத்தில், ஒத்திதார் கோர்ட்டுமூலமாய்ச் சொத்தைத் தனதாக்கிக்கொள்ளலாம், அல்லது கோர்ட்டு ஏலமூலமாய்விற்பனைசெய்து தொகையை வசூலித்துக்கொள்ளலாம்.

134. நிதிகளும் லேவாதேவிக்கடைகளும். (Banks and Money-lending firms) மேற்கூறியவாறு கொடுக்கல்வாங்கல்செய்வதற்காகவே, பாங்க் அல்லது நிதிகளும், லேவாதேவிக்கடைகளும் ஏற்பட்டிருக்கின்றன. மற்றவியாபாரத்தொழில்களைப்போலவே கொடுக்கல் வாங்கல் என்பது இவற்றின்தொழில். பணமுள்ளவரிடமிருந்து சொற்ப வட்டிக்குக் கடன்வாங்குவதும் பணம் தேவையானவருக்கு அதிகவட்டிக்குக் கடன்கொடுப்பதும் இவற்றின்முறை. அதனால் ஏற்படும் வட்டி வித்யாஸமே இவைகளுக்கு ஆதாயம். இக்கடைகளும் நிதிகளும், தனியாகவும், பலர்சேர்ந்து கூட்டாகவும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளிற்செய்யும் கொடுக்கல்வாங்கல்களின் தன்மைக்கும் அளவுக்குந்தக்கவாறு நாணயம் ஏற்படுகின்றது. அதிகவட்டிக்கு ஆசைப்பட்டுக்

கண்டபடி பணங்களைக் கடன்கொடுத்தால் அப் பணங்கள் வரமார்க்கமில்லாமல் இக்கடைகள் முறிந்துபோகின்றன. இதனால், 'பாங்குகளிற்பணம்போட்டுவிட்டோம். இனிப் பயம்கிடையாது, வட்டியை வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டிருக்கலாம்' என்று இருக்கும் பலபேர் திடீரென்று பொருளிழந்து பரிதபிக்கின்றார்கள். நமது ராஜதானியிற் சிலவருஷங்களுக்குமுன் திடீரென்று திவாலான 'அர்ப்பத்நட்' என்னும் பாங்கின்வஞ்சனைக் கிரையாகித் தவித்தவர் எண்ணிறந்தோரல்லவா ?

ஐக்யலேவாதேவிச்சங்கங்கள்.

Co-operation credit Societies.

இவைகளைப்பற்றி முன் 80-வது ப்ரகரணத்தில் விரிக்கப்பட்டிருக்கின்றது.

135. **உண்டியல்கடைகள்.** மதுரையிலுள்ளசேஷன் கல்கத்தா ஸேன்கம்பேனிக்கு 10000-ரூபாய் அனுப்பவேண்டியதாய்வைத்துக் கொள்வோம். மணியார்டர்மூலமாய் அனுப்புவதானால் ரூபா 100 மணியார்டர் சார்ஜ் ஆகும். மதுரையில் **ரா.** ம. என்ற உண்டியல் கடைக்குச் சென்றால், அவர்கள் ஷை தொகையைப்பெற்றுக்கொண்டு, சேஷன் அல்லது ஷை உத்திரவுக்கு ரூபாய் 10000 வேண்டும்போது கொடுக்கவும்' என்று தனக்குத்தெரிந்த கல்கத்தா 'சி. த' கடைக்கு உண்டியல்கொடுத்து அதற்கு 100-ரூபாய்க்கு 2-அணாவீதம் 'வட்டம்' அல்லது கமிஷன் எடுத்துக்கொள்வார்கள். சேஷன் இந்த உண்டியல் சீட்டில், ஸேன்கம்பெனிக்காவது ஷை உத்தரவுக்காவது இந்தத் தொகையைச் செலுத்தவும் என்று எழுதி, அதை ஷை கம்பெனிக்குத் தபால்மூலமாய் அனுப்புகிறான். ஸேன்கம்பெனியார் இதை சி. த. உண்டியல்கடையிற்காட்டிப் பணம்பெற்றுக்கொள்ளுவார்கள்.

இதனால், சேஷனுக்கு 100-ரூபாய் மணியார்டர்கட்டணத்துக்குப்பதிலாய் $12\frac{1}{2}$ ரூபாய் உண்டியல்வட்டத்தோடு காரியம்முடிந்துவிடுகின்றது. உண்டியல்கடைக்கு வட்டம் லாபம்.

ஆனால், இம்முறை நடபடிக்கைகள் ஷைகடைகளின்நாணயத்தைப்பொறுத்தே நடக்கவேண்டியதாயிருக்கின்றன. மற்ற விவரம் **உண்டியல்** என்னும் ப்ரகரணத்தில் அறிந்துகொள்ளலாம்.

R. S. நாராயணஸ்வாமி ஐயர், B.A., B.L.

பண்டைத்தமிழரும் மரக்கலப்பயிற்சியும்.*

யான் இங்கு எடுத்துரைக்கப்புகுந்தவிஷயம் சங்கத்தமிழ் நூலாராய்ச்சியுள்ள நுண்மதியாளர்க்கும் சரித்ரப்புலமையிற்கைவந்த பண்டிதர்களுக்கும் சிறிதும் புதிதாகத்தோற்றாது. ஆயினும், செந்தமிழபிமானஞ்செறிந்த நம்மவர்களிற்பலர் அவகாசக்குறைவாலும், அப்யாஸக்குறைவாலும் பண்டைத்தமிழ்நூல்களின்சிறப்பினையும் தமிழர்களின் நாகரிகத்தினையும் உள்ளவாறுணராதொழிகின்றனரன்றே; அவர்களுக்கு இச் சிறு வ்யாஸம் சிறிதுபயன்படுமென்று இதனை இங்குப் படிக்கலானேன். பெருந்தகையாளர்கள் இதன்கட் காணப்படும் பிழைகளைப் பொறுத்தருள்வாராக.

ஒருதேசத்தார் வேறுள அயல்நாட்டாரோடு பல்லாற்றானும் நெருங்கிப்பழகுவதனால் அவர்நாட்டுக்கு மிக்கநன்மையேவிளையுமென்பது சரித்ரவுணர்ச்சியுடையார்யாரும் முதன்முதல் ஒப்புக்கொள்ளும்விஷயமாகும். ஒருமனிதன் மற்றமனிதர்களோடுறவுகலவாது தனித்துநிற்பானானால், அவன் குறுகியமன அமைப்புடையவனாய் உலகியலையுணராதொழிதல்போல, ஒருநாட்டிலுள்ளஜனங்கள் பிறநாடு செல்லுதலின்கண் ஊக்கமில்லாதவராயின் அந்நாடு சிறிதும்வளர்ச்சி பெறாது வரவரத் தளர்ச்சியுற்றழியும். இவ்வுண்மையை ஜீவகசிந்தாமணியுடையார்,

> "ஊற்றுநீர்க் கூவலுள் உறையும் மீனனூர்
> வேற்றுநாட் டதன்சுவை விடுத்தல் மேயினார்"

என்றுகூறி உவமைமுகத்தால்விளக்கியுள்ளார்.

இஃது இவ்வாறாக, பற்பலதுறைகளிலும் நாகரிகம்மிக்குவிளங்கிய நம்முன்னோர்களாகிய பண்டைத்தமிழ்மக்கள் பிறநாட்டாரோடுபழகுவதிற் கலங்கொண்டு கடல்கடந்துவந்ததன்மையினைப்பற்றிச் சிறிது

* இது, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 13-ஆம் வருஷக்கூட்டத்திற் படிக்கப்பெற்றது.

இங்குத் தொகுத்துக்கூறுவதே யான் இன்று எடுத்துக்கொண்ட விஷயமாகும்.

ஒருநாட்டின் பண்டைக்காலத்தியவழக்கம் ஒன்றைப்பற்றி ஆராய்ந்துணர்தற்குப் பிறசாதனங்களில்லாதவழி, அந்தத்தேசத்தில் வழங்கும் பாஷைகளிலுள்ளநூல்கள் சிறந்தகருவிகளாகும். அன்றியும், அந்தப்பாஷையில் ப்ரஸ்தாபவிஷயஸம்பந்தமானகருத்துக்களை வெளியிடற்குள்ளசொற்களின்தன்மையும் மிகுதியும் தக்ககருவிகளாகும். சீனு, திபேத்து இவ்விடங்களிலுள்ள உள்நாடுகளில் ஸமுத்ரத்திற்கு ஸொந்தபாஷையிற் பேரே கிடையாதாம். இவ்விடங்களிலுள்ளார் தமக்கு நெடுந்தூரத்திலிருக்கும் ஸமுத்ரம் எப்படிப்பட்டதென்பதை யுணரார்போலும். நம் தமிழ்மொழியிலோ, ஸமுத்ரத்துக்கு ஆழி, கடல், பரவை, புணரி, ஆர்கலி, முந்நீர் எனப் பல செந்தமிழ்ச்சொற்கள் காரணப்பெயர்களாய்க் காணப்படுகின்றன. இப்பெயர்களாலேயே தண்டமிழ்க்கும் தண்கடற்கும் தக்கஸம்பந்தமுண்டென்பது எளிதிலுணரப்படும்.

இனிக் கப்பலுக்குத் தமிழிலுள்ளசொற்களைச் சோதிப்போம். அவை கலம், மரக்கலம், நாவாய், வங்கம், மிதவை, கப்பல் முதலியன. இவற்றில் வங்கத்தை இடவாகுபெயரென்றும், (வங்கதேசத்திலிருந்து கப்பலுக்கானமைபற்றி) நாவாயை வடமொழித்திரிபென்றும் கொண்டாலுங்கூட மற்றைச்சொற்கள் தனித்தமிழ்மொழிகளேயன்றோ? இச்சொற்கள் தமிழ்மொழியிலிருத்தலொன்றே தமிழர்கள் கலமிசைச் சென்றுவந்ததற்குப் போதியகுறிப்பாகும். இச்சொற்களும் இவற்றோடியைபுள்ளகருத்துக்களும் தமிழ்நூல்களிற் பல இடங்களில் மிக அழகாக மலிந்துகாணப்படுகின்றன. அவற்றிற் சிலவருமாறு:—

"தாரகை சுடர்கள் மேக மென்றிவை தவிரத் தாழ்ந்து
பாரிடை யழுந்து கின்ற படர்நெடும் பனிமாக் குன்றம்
கூருகிர்க் குவவுத் தோளான் கூம்பெனக் குமிழி பொங்க
ஆர்கலி யழுவத் தாழுங் கலமென லாயிற் றன்றே" கம்பராமாயணம்

"மேக்குறச் செல்வோன் பாய விலங்கிநீ ரிலங்கை வெற்பு
நூக்குறத் தங்கு மிங்கும் தள்ளுற நுடங்கு நோன்மை
போக்கினுக் கிடையூ றுகப் புயலொடு பொதிந்த வாடை
தாக்குறத் தளர்ந்து சிந்துங் கலமெனத் தக்க தன்றே"
—கம்பராமாயணம்.

"வெங்கட்டின் களிறடர்த்தாய்! வித்துவக்கோட் டம்மானே
எங்குப்போய் உய்கேன்உன் இணையடியே யடையலல்லால்?
எங்கும்போய்க் கரைகாணு தெறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே"

—பெருமாள்திருமொழி.

"மனமெனுந் தோணி பற்றி மதியெனும் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கை யேற்றிச் செறிகட லோடும் போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறிய வொண்ணு
துனைஉனும் உணர்வை நல்காய் ஒற்றியூ ருடைய கோவே"-தேவாரம்.

"போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் புரள நடுங்குறுவாய்—தீவாய்
அரவகற்று மென்போல ஆர்கலியே! மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று"—நளவெண்பா.

இவ்வாறு பாடல்கள்பலவற்றுள் கடல் கலம் இவைஸம்பந்தப் பட்டவிஷயங்கள் வெகுஅழகாகவும், ஸுலபமாகவும் அமையப்பெறு தற்கு இயல்பாகவே மிக்க இயைபுடையது நம்முடைய அருந்தமிழ் மொழி. இங்ஙனம் தமிழ்மொழியின்கண்ணுள்ளசொற்களும் அச் சொற்களைத் தொடர்களிற்பெய்துவழங்குங்கால் அமையும் ஆற்ற லும் அழகும் தமிழ்நாட்டாருக்கு மரக்கலத்தொழிலில் நல்லபழக்க மிருந்ததென்பதைத் தெள்ளிதில் தெரிவிக்கும்.

இனித் தமிழ்நூல்களிற் காணப்பெறும் சில குறிப்புக்களால் இக்கப்பற்றொழிலைப்பற்றிய பல அரியவிஷயங்கள் தெரியலாகும். அவற்றுட் சில ஈண்டுத் தொகுத்துக்கூறப்படும்.

தமிழ்நாட்டில், கப்பற்றொழிலுக்கு இன்றியமையாதனவாகும் துறைமுக இடங்கள் பல இருந்தன. இவற்றிற்குப் பட்டினங்கள் என்றுபெயர். புறநானூறு, சிலப்பதிகாரம், பத்துப்பாட்டுமுதலிய பண்டைநூல்களிலிருந்து, தமிழகத்தில் முசிரி, புகார், தொண்டி, கொற்கை இந்நகர்களெல்லாம் வ்யாபாரத்தில் மிகச் சிறந்ததுறை முகங்களாகவிளங்கின என்பது உணரப்படும். இவற்றுள், முசிரி மேற்குக்கடற்கரையிற் சிறந்ததுறைமுகமாயிருந்தது,

"...............................சேரலர்
சுள்ளியம் பேர்யாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிறி"—அகநானூறு.

என்னும் அகப்பாட்டால் அறியலாகும். மேலும் இவ்வூர்,

"கலந்தந்த பொற்பரிசம்
கழித்தோணியாற் கரைசேர்க்குந்து;*
மலைத்தாரமும் கடற்றாரமும்
தலைப்பெய்து வருநர்க்கீயும்
புனலங்கள்ளின் பொலந்தார்க்குட்டுவன்
முழங்கடன்முழவின் முசுறியன்ன"—புறநானூறு.

எனவரும் புறப்பாட்டினும்,

"போரில்
முகையவிழ்தார்க் கோதை முசிறியார்† கோமான்"

எனத் தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியலில் 8-ஆம் சூத்திரவுரை மேற்கோட்பாட்டினும் குறிக்கப்பெற்றிருக்கிறது.

புகார் என்பது, காவிரிப்பூம்பட்டினம் என்னும் மறுபெயருடையது. சோணாட்டிற்கு ராஜதானியாய் இலங்கிநின்றது. சிலப்பதிகாரத்தின் முதற்பகுதிக்குக் கதைநிகழ்விடம் இதுவே. இதன் துறைமுகச்சிறப்பைச் சிலப்பதிகாரத்திலும், பட்டினப்பாலையினும் பாக்கக்காணலாம்.

தொண்டியென்பது இப்போது சிவகங்கையைச்சார்ந்த ஒரு சிறு துறைமுகமாக இருப்பினும், முற்காலத்தில் வ்யாபாரச்சிறப்பு விசேஷமாக வாய்க்கப்பெற்றிருந்தது. இதனையன்றிச் சேரலர்தொண்டியென மேற்குக்கடற்கரையினும் ஒரு தொண்டியிருந்தது. அதுவே,

---

* சேர்க்கும் என்பது 'சேர்க்குந்து' எனச் செய்யுளில் விகாரப்பட்டது.

† இவ்வூர்ப்பெயர் முசிறி, முசிரி, முசுறி என மூவகையாகவும் காணப்படுகிறது.

"நிலவுமணல் வியன்கானல்
தெண்கழிமிசைச் சுடர்ப்பூவிற்
றண்டொண்டியோ ரடுபொருந!"

என்னுமிடத்தும்,

"கண்ணா றும்மே கானலந் தொண்டி"

என்னுமிடத்தும் புறநானூற்றிற் குறித்திருப்பதாகக் கருதப்படுகிறது.

கோற்கையும் பாண்டிநாட்டிற்குச் சிலகாலம் தலைநகராயிருந்து முத்துவியாபாரத்தில் முதன்மைபெற்றிருந்தது. அது இப்போதும் முத்துக்குளிக்கும் துறைமுகங்களுள் ஒன்றாக இருக்கிறது. இந்நான் கும் தமிழ்நாட்டில் மிக்க ப்ரஸித்திபெற்ற துறைமுகங்களாம். இவை யன்றி மிகப்பலவாகிய சிறு துறைமுகங்களும் தமிழ்நாட்டில் இருந் திருக்கவேண்டுமென்பது தமிழ்ச்செய்யுட்களில் அரசர்களுக்குஅடை மொழிகூறி அவர்களைவிளிக்குமிடங்களில்,

"...................................நாவாய்
களிறுபோற் றூங்குங் கடற்சேர்ப்ப!" என்றும்,

"நற்றளிர்ப் புன்னை மலருங் கடற்சேர்ப்ப!" என்றும்,

"கள்ளுயிர்க்கும் நெய்தற் கனைகடற் றண்சேர்ப்ப!" என்றும்,

"கண்டல் திரையலைக்கும் கானலந் தண்சேர்ப்ப !" என்றும்,

"...................................போதெலாம்
மாதர்வண் டார்க்கும் மலிகடல் தண்சேர்ப்ப!" என்றும்,

அவர்களுடைய கடற்கரைச் சிறப்பைத் தமிழ்ப்புலவர்கள் பலபடப் பாராட்டிப்போதலால் உணரலாகும்.

இத்தகைய துறைமுகப்பட்டினங்கள் இருக்குமிடங்களிற் பண் டைத்தமிழர்கள் கலங்கரைவிளக்கம் (Light House) சுங்கச்சாலை (Custom House) முதலியன ஏற்படுத்தியிருந்தனர். கலங்கரை விளக்கம் என்னும் தொடர்மொழி சிலப்பதிகாரத்தில் 'இலங்குநீர் வரைப்பிற் கலங்கரைவிளக்கமும்' என்னுமிடத்தில் வழங்கப்பட்டுள் ளது. கலங்கரைவிளக்கம் என்பதற்கு ஆசிரியர் அடியார்க்குநல்லார் "பாடைவேறுபட்டதேயத்து நிலையறியாதோடுங்கலங்களை அழைத்

தற்கிட்டவிளக்கு" என்று விரித்து உரைகூறியிருக்கிறார். கலங்கரை விளக்கம் என்னும் இவ்வரிய தொடர்மொழியின்வழக்கே, தமிழர்கள் தங் கப்பல்களையும் பிறகப்பல்களையும் ஆபத்தினின்றுகாத்தற்கு முன்ஜாக்கிரதையாக இருந்தனர் என்பதைத் தெளிவுறுத்தும். மேலும் துறைமுகப்பட்டினங்களிற் கப்பல்கள் தம்மீது கொடிகட்டிப் பறக்குந்தன்மையொடுவந்து தங்குவதையும், அவற்றிலிருந்து சாமான்கள் மூடைமூடையாக ஒழுங்காக இறக்கி அடுக்கப்படுவதையும், அவற்றிற்கு அரசருடைய முத்திரையிடுதலையும், சுங்கம்வாங்குதலையும், வியாபாரச்சரக்குகளையும் விரித்துக்கூறியிருப்பதைக் காவிரிப்பூம் பட்டினவருணனையாகப் பட்டினப்பாலையில்,

“ நீரினின்று நிலத்தேறவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடை” எனவும்,

“ நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்துங் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகில்” எனவும்,

படிக்குந்தோறும் படிக்குந்தோறும் என்னே பண்டைத்தமிழர்தம் வாணிபமுறைச்சிறப்பு எனப் படிப்பவர் எண்ணியெண்ணி வியப்புறுவார் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

தமிழ்நாட்டார் நெடுங்காலமாகக் கப்பல்வியாபாரத்திற்கைவந்தவர் என்பது மயில், அரிசி என்னும் சொற்கட்கு முறையே ஹிப்ரு

பார்ஷையிலும், இங்க்லீஷ்பாஷையிலும் அமைந்துள்ள துகி(தோகை) ரைஸ் (அரிசி) என்னும் சொற்களாலும், பிறநாட்டுப் புராதனநாணயங்கள் தமிழ்நாட்டிற் பல இடங்களிற் புதைந்துகிடக்கக்காண்பதாலும் எளிதில் அறியப்படும்.

மற்றும் தமிழில் அகப்பொருளிலக்கணத்தில், தலைவன் தலைவியைப்பிரிதற்குக் காரணம்சொல்லுமிடத்திற் பொருளீட்டலைத் தக்க காரணமாக இலக்கணக்காரர்கள்வைத்திருப்பதுமன்றி, அங்ஙனம் பொருளீட்டற்குக் கலமிசைச்சேர்ந்து கடல்கடத்தலையும் அவ்விலக்கணக்காரர்கள் எடுத்துச்சுட்டியுள்ளார்கள். இதனால் வாணிபத்தொழிலில் ஊதியம் உறுதற்பொருட்டுத் தமிழ்மக்கள் 'திரைகடலோடியுந்திரவியந்தேடு' என்னும், தமிழ்மூதாட்டியாகிய ஔவையார் தமது செவ்வியன்மொழியினுக்கேற்பவே கலங்கொண்டு கடல்கடந்து வந்தனர் என்பது நன்குதுணியப்படும். எனினும்,

"முந்நீர் வழக்க மகடூஉவோ டில்லை"—தொல்காப்பியம்.
"குலமட மாதரொடு கலமிசைச் சேறலும்
பாசறைச் சேறலும் பழுதென மொழிப"—நம்பியகப்பொருள்.

என்று இலக்கணநூல்கள் இயம்புதலால், தமிழர்கள் தம் மனைவிமக்களோடு பிறவூர்களுக்குக் கலமிசைச்செல்லும் வழக்கமுடையவரல்லரென்பதும்,வ்யாபாரம் வ்ருத்தியுற்றவழியும் பிறநாட்டிலே தம்மனைவிமக்களோடுதங்கி அங்கேயே தங்கள் கிளைக்குடிகளோடு வம்சபரம்பரையாய்ப் பெரும்பாலும் வசித்துவந்தவரல்லரென்பதும் அறியலாகும்.

இதுகாறும் தமிழ்மக்கள் கப்பல்தொழிலால் வாணிபநலம் சிறந்திருந்தசெய்தி குறிக்கப்பெற்றது. இனித் தமிழர்கள் கலங்கொண்டு கடல்கடந்து பிறநாடுவென்றவிஷயத்தினைப்பற்றிச் சிறிது விரித்துப் பேசுவோம்.

ஒருநாட்டரசனுக்கு ஸேனாபலம் சிறக்கவேண்டுமெனில் அவனிடம் நிலப்படை நீர்ப்படை இரண்டும் இருத்தல்வேண்டும். நீர்ப்படைவலிகொண்டன்றோ ஜப்பான்தேசம் தன்னிலும் பன்மடங்கு அளவிற்பெரியதாகிய ரஷ்யாதேசத்தின்மேல் இலகுவாகவெற்றி பூண்டது? நீர்ப்படைவலியாற்றானே கி. பி. 17-ஆம் நூற்றாண்டி

விருந்து ஆங்கிலத்துரைத்தனமும் இணையில்லாதவளர்ச்சியுற்றுவ தாயிற்று. இவற்றைநோக்கின் ஒருநாட்டின்பெருமைக்கு நீர்ப் படை இன்றியமையாச் சாதனமென்பது எளிதினுணரலாகும்.

இதுநிற்க. இலங்கைத்தீவின் பண்டைச்சரித்திரத்தை ஆராய்ந் தால் அது சிலநூற்றாண்டுகளிற் சோழ அரசர்களின் ஆட்சிக்குட் பட்டிருந்ததென்பது தெரியவரும். சோழ அரசனாகிய முதற்பராந் தகன் (கி. பி. 907—947) பாண்டியநாட்டையும் இலங்கையையும் கைப்பற்றிக்கொண்டானென்பது, அவனுக்கு "மதிரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரிவன்மன்" என்று சாசனங்களில்வழங்கும் பேரால் அறியலாகும். இராமனைப்போலவே இலங்கையைக் கைப் பற்றியதனால் இவனுக்கு சங்கிராமராகவன் என்னும் காரணப்பெயரு முண்டு. முதல்ராஜராஜனும் (கி. பி. 985—1012) நீர்ப்படைவெற்றி யால் நிரம்பக் கீர்த்தியடைந்தான். இதனைச் சிலாசாசன ஆராய்ச்சி யிற் சிறப்புற்ற ஸ்ரீமான்-து., அ. கோபிநாதராவ் எம். ஏ. அவர்கள் எழுதியுள்ள சோழவம்சசரித்திரம் என்னும் நூலில் அனுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ள கீழ்வரும்,

"முரட்டொழிற் சிங்களர் ஈழமண்டலமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீரா யிரமும்
திண்டிறல் வென்றித் தண்டால் கொண்ட
உடையார் ஸ்ரீ ராஜ ராஜதேவர்........."

என்னும் மெய்க்கீர்த்தியிற் காணலாம்.

மேலும், இராஜேந்திரசோழனென்பான் (கி. பி. 1012—1032) இலங்கையையேயன்றி நக்கவாரத்தீவுகளையும்* கடாரத்தினையும் பிற இடங்களையும் "அலைகடல் நடுவுட் பலகலஞ் செலுத்தி"ச்சென்று கைப்பற்றிக்கொண்டிருக்கிறான். இச்செய்தியும் மேற்குறித்துள்ள புஸ்தகத்தில் மற்றொருமெய்க்கீர்த்தியிலுள்ள,

" ... ...
தெண்டிரை ஈழ மண்டல முழுவதும்
......................சங் கதிர் வேலைத்
தொல்பெருங் காவற் பல்பெருந் தீவும்
நித்தில நெடுங்கட லுத்திர லாடமும்
... ...

* The Nicobars.

கலாமுதிர் கடுந்திறல் இலாமுரி தேசமும்
தேனக்க வார்பொழில் மாநக்க வாரமும்
தொடுகடற் காவல் கடுமுரட் கடாரமும்
மாப்பெருந் தண்டாற் கொண்ட கோப்பரகேசரிவன்மரான
உடையார் ஸ்ரீராஜேந்திரசோழதேவர்........."

என்பதனுல் அறியக்கிடக்கின்றது. இவற்றுல் நீர்ப்படையை யுபயோகித்துப் பிறநாடுகவர்தலில், தமிழர்கள் பழகியிருந்தனரென்பது தெளியப்படும்.

ஆயினும் தமிழர்கள் நீர்ப்படையாற் பகைவர்களை மேற்படத் தாக்குதலிற் பண்டைக்காலத்துக் கிரேக்கர்கள், ரோமர்கள் இவர்களைப்போல அத்துணைக் கிளர்ச்சியும் ஆர்வமும் வாய்ந்தவரென்று கூறவொண்ணுது. இதற்குத் தமிழர்கள் தம் நாட்டையடுத்துள்ள இலங்கை, பர்மா இவ்விடங்களைக் கைப்பற்றினரேயன்றி, கிழக்கே சீனு, ஜப்பான் மேற்கே பாரசீகம், அரேபியா என்னும் தூர தேசங்களை அவர்களின் கப்பற்படைவலிகொண்டு கைப்பற்றியதாகச் சரித்திர ஆராய்ச்சியால் இதுகாறும் தெரியவாராததே போதிய சான்றுகும்.

இத்துணையும் கூறியவாற்றுல், தமிழ்ச்சொற்களின்தன்மைகொண்டே தமிழர்க்குக் 'கடல்' 'கலம்' இவற்றோடு மிக்க இயைபுண்டென்பதும், அச்சொற்கள் தமிழ்ச்செய்யுட்களில்வழங்கும்போது தோன்றும் நயத்தால் அவர்க்குக் கப்பற்றொழிலில் தக்கபழக்கமிருந்ததென்பதும், தமிழ்நாட்டிற் பெரிய சிறந்த துறைமுகப்பட்டினங்கள் இருந்தன என்பதும், மற்றும் அத் துறைமுகங்களிற் கலங்கரைவிளக்கமும் சுங்கச்சாலையும் பிறவும் இருந்தனவென்பதும், தமிழ் மக்களும் தமிழ்மன்னரும் முறையே வ்யாபாரமேம்பாட்டிற்காகவும், வேற்றுநாடுகளைக் கவர்தற்காகவும் மரக்கலங்களை விசேஷமாக உபயோகித்துவந்தனரென்பதும், இன்னோரன்னபிறவும் என்சிற்றறிவிற் கெட்டியமட்டில் தொகுத்துச்சொல்லப்பட்டன.

வே. முத்துஸாமி ஐயன், எம். ஏ., எல். டி.
பள்ளிக்கூட உதவிப்பரிசோதகர்,
அருப்புக்கோட்டை.

ஸ்ரீ:

சுந்தரகாண்டம். (கம்பர்)

"சேந்தமிழ்" (தொகுதி-௧௨-பகுதி ௧௨-ல்) ௪௭௮-ஆம்பக்கத்தொடர்ச்சி.

" வாங்கினண்மூலைக்குவையில்வைத்தனள்சிரத்தால்
தாங்கினண்மலர்க்கண்மிசையொத்தினடடந்தோள்
வீங்கினண்மெலிந்தனள்குளிர்ந்தனள்வெதுப்போ
டேங்கினளுயிர்த்தனளிதின்னதெனலாமே"

இ - ள். வாங்கினள் — சேதனன் அஷ்டாக்ஷரமந்திரத்தை "க்ருஹீத்வா" என்று வான்மீகிபகவான் பிரயோகித்ததற்கிணங்க மனசில்வாங்கினன் என்றார்; மனசில் நிலைபெறுத்தினான் என்றபடி. மூலைக்குவையில்வைத்தனள் - பகவதனுபவ முக்கியசாதனமான சேஷத்வபாரதந்தர்யஸ்வரூபஜ்ஞானத்தைப் பிறப்பிக்கும் த்வயம் என்னும் மந்த்ரத்துடன்சேர்த்து அந்தமந்திரத்தை அநுசந்தித்தான். சிரத்தால்தாங்கினள் - அந்தத்வயார்த்தத்துக்குள் உத்தரவாக்கியார்த்தத்திலூன்றினான்; அதாவது சர்வசிலாக்கியமானதும் சாரமானதுமான மந்திரத்தை அதனுடையகௌரவமும், தன்னுடைய பாரதந்தர்யமும்தோற்ற அதை ப்ரதானமாகவும் மூலாதாரமாகவும் கொண்டாடினான் என்றபடி. மலர்க்கண்மிசையொத்தினள் - தன்னுடைய ஞானக்கண்களால் அம்மந்திரத்தின் பெரும்பயனை அநுபவித்தான். தடந்தோள்வீங்கினள் — பெரியதோள்களாகிய பகவத்பாகவதகைங்கரியசாதனங்களைப்பெருக்கினான். மெலிந்தனள் - பகவத்கைங்கரியத்தில் த்வரையுடையனாய் அது எப்பொழுதுகிட்டுமோவென்னும் ஏக்கத்தாற் சோர்வுற்றான். குளிர்ந்தனள் - இந்த மந்திரானுசந்தானமே சகலவிதகைங்கரியமுமாகி அவன் திருவடிசேவை கிடைப்பிக்கச்செய்வதென்றநிச்சயத்தால் ஸந்தோஷத்தையடைந்தான். வெதுப்போடேங்கினள்—

" ஒருகணத்திரண்டுகண்டேனென்ளிமணியாழியான்ற
திருமுலைத்தடத்துவைத்தாள்வைத்தலுஞ்செல்வநின்பால்
விரகமென்பதனின்வந்தவெங்கொழுந்தீயினல்வெந்
துருகியதுடனேயாறிவலித்ததுகுளிர்ப்புள்ளூற"

எனபதற்கிணங்க, ஈசனுக்கு உகப்பாகச்செய்யும் சத்கர்மங்களில் ஏதேனும் குறைவுபட்டுவிடுமோவென்று மனக்கலக்கங்கொண்டு பரிதபித்தான். உயிர்த்தனள் - இன்னதென்றுதோன்றாது பெருமூச்செறிந்தான். இது இன்னதெனலாமே - இப்படியாகச் சேதனனாற் செய்யப்பட்ட பலசெய்கையை இன்னின்ன எண்ணங்கொண்டு இன்ன காரணத்தோடு இன்னின்னசெய்கைகள்செய்துகொண்டாடினன் என்றுசொல்லுவது எளிதாமோ என்பதாம்.

" மோக்குமுலைவைத்துறமுயங்குமொளிர்நன்னீர்
நீக்கிநிறைகண்ணிணைததும்பநெடுநீள
நோக்குநுவலக்கருதுமொன்றுநுவல்கில்லாள்
மேக்குநிமிர்விம்மலள்விழுங்கலுறுகின்ருள்"

இ - ள். மோக்கும் - சேதனன் திருமந்திரத்தை அனுசந்தானம்செய்துகொண்டே அதனர்த்தத்தை யனுபவிப்பான். முலைவைத்துறமுயங்கும் - அதை த்வயத்தோடு நன்ருகப்பொருந்தும்படி சேர்ப்பான், அதாவது அத்வைதபாவமின்றி விசிஷ்டாத்வைதசித்தாந்தபரமாக அர்த்தத்தை நயிப்பிப்பனென்றபடி. கண்ணிணைததும்பவொளிர்நிறைநன்னீர்நீக்கி - உயர்மழைக்கண்ணீராலாயிரங்கலசமாட்டி, யேங்கினளிருந்ததல்லாலியம்பலள்' என்றபடி தனக்குண்டான ஆஹ்லாதத்தால் அக்ஞானம் மேலிட்டுத் தன்னுற் சரியானகைங்கரியம்செய்து ஆதரிக்கமுடியுமோவென்று ஏக்கங்கொண்ட மனோசாஞ்சல்யத்தைநீக்கி; நெடுநீளநோக்கும் — திருஅஷ்டாக்ஷரத்தின் ஆழ்ந்துகிடக்கும் அர்த்தவிசேஷங்களையெல்லாம் நெடுந்தூரம் ஆராய்வன். நுவலக்கருதும் - அதன்பெருமையைக்கண்டு பூரித்துப் பலமாக ஸ்தோத்திரம்செய்ய ஆசையை உடையவனானன். ஒன்றும்

நுவல்கில்லாள் - அடங்காத ஆனந்தத்தைப்பெற்றபடியால் யாதொன்றும் வாய்திறந்துசொல்லமுடியாது திகைத்துநிற்பான். மேக்குநிமிர் விம்மலள்- ஜ்ஞாநாநந்தத்தாலுண்டான ஆத்மபுஷ்டியுடையனாய்; விழுங்கலுறுகின்றாள் - அக்காரக்கனியான எம்பெருமானை விழுங்குவதுபோல அவகாஹிக்கத்தொடங்கினான் என்பதாம்.

மேலேகண்டவிதமாகத் திருமந்திரத்தை அனுபவித்ததன்மேல், பின்வரும் இரண்டுசெய்யுள்களால் இந்தச் சேதனனுக்குண்டான தேஜஸ்ஸையும் அவன்பெற்ற பேருதவியையும் உணர்த்துகிறார்.

"நீண்டவிழிநேரிழைதன் மின்னினிறமெல்லாம்
பூண்டதொளிர்பொன்னனையபொம்மனிறமெய்யே
ஆண்டகைதன்மோதிரமடுத்தபொருளெல்லாம்
தீண்டளவில்வேதிகைசெய்தெய்வமணிகொல்லோ"

இ - ள். நீண்டவிழிநேரிழைதன் - திருமந்த்ரார்த்தஜ்ஞானத்தைர்க்கியமடைந்த சேதனனுக்கு. மின்னினிறமெல்லாம் - அப்பியாசதசையில் மின்போற்றோன்றிமறைந்துவந்த ஸ்வரூபஜ்ஞானமெல்லாம்; மெய்யே - பாவநாப்பிரகர்ஷத்தாலே பிரத்தியக்ஷஸமானாகாரமாய்; - ஒளிர் பொன்னனைய பொம்மனிறம் பூண்டது - தப்தகாஞ்சனம்போல் இடையீடின்றிவிளங்கிற்று; அதாவது: சேதனனுடைய மனநிலை நிஷ்களங்கமாயிற்று; (ஏனெனில்) ஆண்டகைதன்மோதிரம் - திருஅஷ்டாக்ஷரமந்திரமானது. அடுத்தபொருளெல்லாம் - உபதேசம் பெற்ற எந்தஜீவனையும். தீண்டளவில் வேதிகைசெய் - சிரவணமாத்திரத்தாலே ஸ்வரூபப்ராகாசத்தை யுண்டாக்குதலால். தெய்வமணிகொல்லோ - ஸ்பர்சனவேதியென்னும், தெய்வத்தன்மைபொருந்திய மணிவிசேஷமோ? அல்லது ஞானானந்தசொரூபந்தானோ? மூலத்தில் ஐக்கியந்தானோ என்று வியக்கத்தக்கதாயுள்ளது என்பதாம்.

"இருந்துபசியாலிடருழந்தவர்களெய்தும்
அருந்துமமுதாகியதறத்தவரையண்மும்

விருந்துமெனலாகியதுவீயுமுயிர்மீளும்
மருந்துமெனலாகியதுவாழிமணியாழி"

இ - ள். வாழி - பெருமைபொருந்தி நித்தியமானவாழ்வை அளிக்கத்தகுந்த; மணியாழி - திருமூலமந்திரமானது; பசியால் - இந்திரியங்களின் ஈடுபாட்டால்; இருந்திடருழந்தவர்கள்-மெய்ந்நெறி செல்லா துய்ந்நெறியறிவின்றித் துக்கத்திலாழ்ந்து கஷ்டப்படுகிற ஒரு ஆத்மாவுக்கு; எய்தும் அருந்துமமுதாகியது - காலவிசேஷத்தில் இந்திரியானுபோகங்களினின்றும் விலகி உய்யும்நெறியடைவதற் கேற்பட்டதொரு ஒப்பற்ற உபாயம் கிடைத்தாற்போலாயிற்று; அறத்தவரையண்மும் - சன்மார்க்கமமைந்தவர்களைத் தேடிச்சேரும். விருந்துமெனலாகியது-விருந்துபோலவே சந்தோஷஹேதுவாயிற்று; வீயுமுயிர்மீளும் மருந்துமெனலாகியது - "இறுதியினுயிர்தந்தீயு மருந்தொத்ததனையதெந்தாய்" "எம்பிரானுமஞ்சொல்லி,உருக்கினனு ணர்வைத்தந்தானுயிர்" என்பதற்கிணங்க, யாதொருபயனுமற்றுத் திருவடிகளைச்சேராது வியர்த்தமாகப்போகும்நிலையில்நின்ற ஒரு ஆத்மா உஜ்ஜீவிப்பதற்கு ஹேதுவான ஒரு அமிருதசஞ்ஜீவிபோலும் ஆயிற்று. என்பதாம்.

இவ் விருசெய்யுட்களாலும் திருமந்திரத்தின்ஸ்வபாவத்தையும், அதன்பெருமையையும், அதனால், சேதனனுக்குண்டானமேன்மை யையும் சொல்லி இனி அடுத்துவருஞ்செய்யுளால் அந்தச் சேதனன் கிருதக்ஞதையுடன் ஆசாரியனை ஸ்தோத்திரம்செய்ய ஆரம்பித்ததைச் சொல்லுகிறார்.

"இத்தகையளாகியுயிரேமுறவிளங்கும்
முத்தநகையாள்விழியினலிமுலைமுன்றில்
தத்தியுகமென்குதலைதள்ளவுயிர்தந்தாய்
உத்தமவெனுவினையவாசகமுரைத்தாள்"

இ - ள். இத்தகையளாகி - மேற்சொன்னபடிக்குள்ள வை பவங்களைப்பெற்று; உயிரேமுறவிளங்கும் முத்தநகையாள் - அத்தி யானந்தத்தையடைந்தசேதனன்; விழியிணைலி - திருமந்திரத்தின் அர்த்தஜ்ஞானசாரம்; மூலைமுன்றில்தத்தியுக - த்வயார்த்தத்தில் ததும்பிவழிய அனுசந்தித்து; மென்குதலைதள்ள - மிருதுபாஷியாய் ஸ்தோத்திரபூர்வகமாக ஆசாரியனைப்பார்த்து. உயிர்தந்தாய் - உஜ்ஜீ விக்கும்பொருட்டு உபதேசம்செய்து அனுக்கிரகித்த எம்பெருமானே! உத்தம - பரமபுருஷா! என - என்றழைத்து ஸ்தோத்திரத்துக்கு ஆரம்பித்து; இனையவாசகமுரைத்தாள் - பின்வருமாறு சேதனன் சொல்லலுற்றான் என்பதாம்.

இச் செய்யுளுக்குப் பிராட்டி கணையாழியைக்கண்டு மகிழ்ந்து ஆனந்தபாஷ்பத்துடன் தன்னை உயிர்வைத்துக்கொள்ளும்படிக்கான ஹேதுவைச்செய்து மணியாழியைக்கொடுத்து உதவின அனுமனைப் பார்த்துத் தன்னுடைய நன்றியறிதலை வெளிப்படுத்தினளென்பது சாமான்னியக்கருத்தாயினும், வேதாந்தபரமாகத் திருமூலமந்திர உபதேசானந்தரம் ஞானப்பிரகாசமுள்ள சேதனன், ஆத்மானந்தப் பெருக்குடன் திருமந்திரசாரத்தை த்வயார்த்தத்திலூன்றி அனு சந்தித்து, உபதேசத்தால் தன்னை உஜ்ஜீவிக்கச்செய்த பரமாசாரிய னுக்குத் தன் கிருதக்ஞதையை வெளிப்படுத்துகிறான் என்னுங் கருத்துத்தோன்றுமாறுகாண்க.

(இன்னும் வரும்.)

எம். எஸ். சேஷையங்கார்.

ஸ்ரீ:

புத்தகமதிப்புரை.

——:o:——

1. சேரன்செங்குட்டுவன்:—இது, முன்பு செந்தமிழ்ப் பத்திராசிரியராயிருந்து இப்போது லெக்ஸிகன்கமிட்டியின் தமிழ்ப்பண்டிதராயிருக்கிற ஸ்ரீமத்-மு. இராகவையங்காரவர்களால், பழைய தமிழ்நூல்களையுஞ் சிலாசாசனபத்திரங்களையுந் துணைக்கருவியாகக்கொண்டு சிலப்பதிகாரத்தைச் செவ்வனமாராய்ந்தெழுதப்பட்ட பழையசரித்திரங்களடங்கிய புதியபுத்தகம்.

இதில், 1 சேரவமிசத்தோர், 2 செங்குட்டுவனுறவினர், 3 அவன்போர்ச்செயல்கள், 4 அவன்காலத்துத்தோன்றிய பிற சரித்திரங்கள், 5 அவனது வடநாட்டியாத்திரையினிகழ்ந்தசெய்திகள், 6 அவனதுசமயநிலை, 7 அவன்காலத்தரசர்கள், 8 அவனைப்பாடிய புலவர்கள், 9 அவன்செய்த அரசியல், 10 அவனதுகுணாதிசயங்கள், 11 அவனது காலஆராய்ச்சி என்னும்விஷயங்களும், கண்ணகி, பத்தினிக்கல், நடுகல் இவற்றின் பழமையானசித்திரப்படமும் பழைய தமிழ்ச்சரிதங்களெழுதுவோர்க் குபகாரமாகும்படி செம்மையாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. அவை தமிழ்மக்களால் மிகப்பாராட்டற்பாலன. ஐயங்காரவர்கள் பழையதமிழ்நூற்பயிற்சியிலும், சரித்திரஆராய்ச்சியிலும் மிகத்தேர்ச்சிபெற்றவர்களென்பதை, அவர்களெழுதிய வேளிர்வரலாற்றாலும், 200 ரூ பரிசுபெற்ற பொருளதிகாரஆராய்ச்சியாலும் எவரும் அறியலாம்.

இப்புத்தகத்துக்கு மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் உப அக்கிராசனாதிபதியாகிய ஆண்டிபட்டிஜமீந்தார் ஸ்ரீமான்-சா. ராம. மு. சித. பெத்தாச்சிசெட்டியாரவர்களாற்செய்யப்பெற்ற பொருளுதவியையும், இச்சங்கத்தின் கெவுரவகாரியதரிசியாகிய ஸ்ரீமத்-டி. ஸி. ஸ்ரீநிவாஸையங்கார் B. A., B. L. அவர்களால் வரையப்பெற்ற முகவுரையையும் நோக்கும்போது இத்தகையபுத்தகங்களையெழுதி அச்சிடுவோரை மேன்மேலும் ஊக்குவதற்குத் தமிழ்ச்சங்கத்தார்செய்யவேண்டுங் கடமையைச்செய்திருப்பதாகத் தோன்றுகிறது.

இதுபோலவே சர்வகலாசங்கத்தாரும் இப்புத்தகத்தை உயர்தரக்கலாசாலைப்பாடபுத்தகமாகத்தேர்ந்தெடுத்து ஐயங்காரவர்களுக்கு ஊக்கத்தையுண்டாக்குவாராயின் அவர்களால் இன்னு மித்தகைய புத்தகமெழுதியுபகரிக்கவியலுமென்ப தெனது துணிபு. இதன் விலை ரூபா ஒன்று. இப்புத்தகம் வேண்டுவோர் ஸ்ரீமத்-மு. இராகவையங்காரவர்கள், தமிழ்ப்பண்டிதர், லெக்ஸிகன் ஆபீஸ், ஸெனட் ஹௌஸ், சென்னை என்ற விலாசத்திற் கெழுதிப்பெறலாம்.

2. ஆரியர்சத்தியவேதம் :— (புதியஏற்பாடு. இதிகாசபுராண முதலியன. இரண்டாம்பாகம். இரண்டாம்பிரிவு.) இது, கோயமுத்தூர்க் கலாநிதிப்பத்திரிகாசிரியர், சேலம் மகா-௱-௱-ஸ்ரீ பகடால நரசிம்மலுநாயுடு அவர்களாற் றெருக்கப்பெற்றது. இதில் ஆரியஸமாஜ ஜனுசாரசீர் திருத்தசம்பந்தமான அறிவொழுக்கங்களைப் புலப்படுத்தும் பலவிஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவை, சாதுர்வர்ண்யங்களுக்கும் சமானபாவமாயிருக்கும்படி யோசித்து மிகுந்த தாராளசிந்தையுட னெழுதப்பட்டனவாயினும், ஆரியர்சத்தியவேதம் என்று பெயர்கொடுத்திருப்பதைநோக்கும்போது அநாரியர்களுக்கு இது விலக்காயுள்ளதென்று பொருள்கொள்ள இடங்கொடுக்கின்றது. அதற்குமிடமின்றி எல்லோர்க்கும்பொதுவாயிருக்கும்படி விஷயங்களைத்தொகுத்து மானுஷசத்தியவேதமென்று பெயரிட்டிருந்தால் இதனினும் மேலான பரசமிர்த்தியைப்புலப்படுத்தியிருக்கும். அன்றியும், அதிருஷ்டஜனகமான வர்ணாச்சிரமசமயவிசேஷதர்மகர்மாநுஷ்டானங்களைத் திருஷ்டபலஜனகங்களாகத் தமக்குத்தோன்றியவாறு கூறும் யுக்திகற்பனங்கள் பிராமாணிகர்களாற் கொள்ளத்தகாதனவாயிருக்கின்றன. அவற்றையொழித்து இப்புத்தகமுழுதும் ஐககண்டியமாகும்படி திருத்திப்பதிப்பிக்கப்பெறுமானால், பொதுஜனசமூகத்துக்குப் பயன்படத்தக்கதாகும். இப்புத்தகம்வேண்டுவோர் அதன் ஆசிரியர்க் கெழுதிப்பெறலாம்.

பத்திராதிபர்.